விளம்பர விகிதங்களுக்கு :
மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்
பெரியதெரு,
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு எழுதுக.

# சத்தியவேத பாதுகாவலன்

சந்தா விபரம்
•
வருடசந்தா
இலங்கை ரூபா 5-50
வெளிநாடுகள் „ 6-50

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA.
1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
Telephone : No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 15-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 36-ம் இலக்கம்


## கருதினால் அகஜியானியன்

### ஆண்டகை வருகின்றார்

விசுவாசப்பரப்புதல் திருச்சங்கத்தின் புதியதலைவரும், 64வயதுடையவரும், ஆர்மீனியர்களின்பத்திரியாக்குமான கருதினால் ஜோர்ஜியா, அகஜியானியன் ஆண்டவரின் சீவியவரலாறுபற்றிய சில விபரங்கள் சென்றவாரம் வெளிவரலாயின. அங்ஙனமாக ஆண்டகையவர்கள் கீழ்த்தேசங்களுக்கு விஜயஞ்செய்யும் தமது பிரயாணத்தின்போது நிகழும் புரட்டாசிமாதம் 20-ந்திகதி செவ்வாய்க்கிழமை இலங்கைவந்துசேர்ந்து இங்கேமூன்றுதினங்கள் தங்கியிருப்பார். மிஷனரிய—அதாவது வேதபோதகநாடுகளின் தலைவரென்றமட்டிலே மிஷனரிய உலகத்துக்குத் தரிசனைகள்அளிப்பதில் இதுவரை பரக்க இவர் பிரயாணஞ்செய்திருக்கின்றார். சென்றவருடம்இவர் பிலிப்பைன்ஸ்நாட்டின் தலைப்பட்டணமாகிய மனிலாநகரைத் தரிசித்துப் பிந்த ஜப்பான், கோறியா, மற்றும்தூரகிழக்கு நாடுகளுக்குச்சென்றார். இவரது தரிசனை அட்டவணையிலே ஆஸ்திறேலியாவும், நியூசிலாந்தும் அடுத்திருந்தன, இவ்வருடம் ஆண்டகை அவர்கள் பாகிஸ்தானுக்குத் தமதுவிஜயத்தை இப்போது ஆரம்பித்திருக்கின்றார். அங்கிருந்துஇவர் இந்தியா, இலங்கை, பர்மாநாடுகளைத் தரிசிப்பார். இலங்கையைத் தரிசித்துக்கொண்டு அவர் இம்மாதம் 23-ந்திகதியன்று இந்தியா செல்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

### சீனக்குரு வேதசாட்சிகள்

சீனாவிலே கடந்தபதினைந்து வருடங்களிலும் ஒவ்வொரு ஏழு கத்தோலிக்கருக்கும் ஒருவர்வீதம் தங்கள் திருவேதத்திற்காகத் தங்கள் உயிரைக் கொடுத்திருக்கிறார்களென்று மூனிச்நகர சற்பிரசாத மகாநாட்டின்போது குழுமியிருந்த மிஷனரிமாரின் கூட்டம் ஒன்றிலே வண. வியான்னிஹிஸின்சுவாமியார் தெரிவித்திருக்கின்றார். பதினைந்து வருடங்களிலும் 500 சீனக் குருமார் வேதசாட்சிகளாயினரென்றும், சிறைச்சாலைகளிலோ அன்றேல் தொழில் முகாங்களிலோ 8 சீன மேற்றிராணிமாரும், குருமாரும், விசுவாசிகளுமாகப் 10,000 பேருக்குமேலும் இருந்தார்களென்றும், சீனக்கத்தோலிக்கர் காட்டிவரும் வீரத்துவமும், தைரியமுமான விசுவாசபிரமாணிக்கத்தை அத்தாட்சிப்படுத்துதற்கு ஏராளமான சான்றுகள் இருக்கின்றனவென்றும் அவர் மேலும் தெரிவிக்கலாயினர். சீனாவிலிருந்து திருச்சபையைப் பற்றிவரும் அறிக்கைகள் மட்டிலே மிகுந்த எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்; ஏனெனில், அவைகள் கம்யூனிஸ்தர்கள்மூலம் கிடைக்கின்றன என்றும் அவர் ஆலோசனை கூறினார்.

### பாப்பரசரும் லூத்தேர்சபைப்பாலியனும்

ஒஸ்ரியாவின் கடற்கரையில் நீந்தியபோது விபத்துக்குள்ளாகிப் பாரிசவாதங்கண்டு றோமைநகர் ஆஸ்பத்திரிஒன்றில் இருந்துவருகிறவனும், ஜேர்மனியிலிருந்துவந்தவனுமான 18 வயதுடைய ஜோர்க் ஸ்க்மியெக்கெல் என்ற லூத்தேர்சபைப் புரொட்டஸ்தாந்த இளைஞனை ஆற்றித்தேற்றுமாறு அருளப்பபாப்பரசர் சமீபத்திலே தமதுசொந்தப்பிரதிநிதிஒருவரை அவனிடம்அனுப்பிவைக்கலாயினர். ஆஸ்பத்திரியில் எவருமே ஜேர்மன்பாஷை பேசமுடியாதிருக்குங்காரணமாக அவ்விதம் ஒன்றியாயிருப்பதைக் கேள்விப்பட்டதும் ஜேர்மன்பாஷைபேசுகின்ற ஆசீர்வாதப்பர் சபைச் சந்நியாசர் ஒருவரை அவனுடைய தோழனாக்கிவிட்டார். இவர்மூலம் அவ்விளைஞன் பாப்பரசரைப்பற்றிக் கேட்டறிந்து, அவருடையஆசீர்வாதத்தை வேண்டிக்கொண்டான். அவனது நிலைமையைப்பற்றிப் பாப்பரசர் விசாரித்தறிந்து, அவனுடையபெற்றார் தங்கள் புதல்வனைப்பார்க்க வந்திருந்தபோது, பிரத்தியேக பேட்டிஒன்றில் தம்மைவந்து சந்திக்குமாறு அவர்களை அழைத்திருந்தார்.

## செஞ்சீனாவின் எதிர்காலம்

புலியின்வாய்ப்பட்ட புள்ளிமானைப்போல் இன்று கம்யூனிஸத்தின் வாய்ப்பட்டுக் கதிகலங்கிக் கொண்டிருக்கின்ற சீனாவின் நிலைமையையிட்டு அந்நாட்டிலுள்ள சீனர்களில் பெரும்பாலாரும், அதற்குவெளியே பிறநாடுகளில்வசிக்கின்ற சுமார்1கோடியே 30லட்சம்சீனர்களும் கவலைகொண்டவர்களாய்க் காணப்படுகின்றார்கள். சீனாவில் நடைபெறும் கம்யூனிஸ்தஆட்சி சோகந்தருவதாகும்; இந்தக் கம்யூனிஸ்தஆட்சியும் நிலைகொள்ளாது என்றோஒருநாள் கடந்துபோகும்; சீனாவின் நீண்டகால சரித்திரத்தில் கழிந்துசெல்லும் உபகதையாய் — ஒருஇடைக்கால சம்பவமாய் அதுகடந்தேபோகுமென்று உள்நாட்டிலும், வெளிநாடுகளிலுமுள்ள சீனர்கள் கருதுகின்றார்கள்.

வடக்கேயிருந்துவந்த மங்கோலியமிலேச்சர்களது ஆட்சியின் கீழ் சீனதேசம் முன்னூறுவருடகாலமாக இருந்துவந்தது. மஞ்சு இராசவம்சத்தின் இந்தக்கொடிய ஆட்சி நிகழும் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கவிழ்த்துவிடப்படலாயிற்று. வெளிநாடுகளிலுள்ள சீனர்கள் மாக்ஸீயத்தை விரும்புபவர்களுமல்ல. கம்யூனிஸ்த பீக்கிங் ஆட்சிக்குக் கைகொடுப்பவர்களுமல்ல. 1911-ம்ஆண்டு சீனாவில் நிகழ்ந்த அரசியற் புரட்சிக்கு வெளிநாடுகளிலுள்ள சீனர்களே அதிகம் பக்கபலமாகப் பின்னணியில்நின்று அதுவெற்றியடையத் திடமாயுழைத்தார்கள். மஞ்சு இராசகுடும்பத்தை ஒழித்துவிடவும், சன்யாற்சென் அவர்கள் தலைமையில் குடியரசு நிறுவப்படவும் துணையாய்நின்றார்கள்.

கம்யூனிஸ்தபிடியிலிருந்து சீனா விடுதலைபெறுவதெல்லாம் வெளிநாடுகளில்வசிக்கும் இந்தச்சீனர்களில்தான் தங்கியிருக்கிறதென்ற நம்பிக்கை இன்றுபலமாக எழுந்துள்ளது. இவர்கள் தாய்நாட்டுடன்கொண்டுள்ள இன,கலாசார, பாஷைத் தொடர்புகள் இன்னுமேகுறையாது பலங்கொண்டிருக்கின்றன. உலகில் குரூரஆட்சி எங்குநடைபெற்றதோ அந்த ஆட்சி ஒரு குறுகியஆட்சியாகவே முடிவடைந்தமை சரித்திரங் கண்ட உண்மை. கெடுபிடி யுத்தத்தை உண்டுபண்ணி உலகின் பலநாடுகளுக்கும் தலையிடியைக் கொடுத்துவருகின்ற கம்யூனிஸமும், அதன் ஆதிக்கமும் இறுதியடையுங்காலம் ஒருநாள் வந்தே தீரும்.

### ஜேர்மனியில் ஜப்பானியகன்னிகாமடம்

மூனிச்நகர் சர்வதேச சற்பிரசாத மகாநாட்டுக்குச் சமுகமளிக்கச்சென்று ஜேர்மனியில் தங்கியிருந்தபோது ரோக்கியோ நகர் அதிமேற்றிராணியாராகிய கருதினால் டோய் ஆண்டவர் கொலோன்நகரிலே ஐரோப்பாவின் முதலாவது ஜப்பானிய கன்னிகாமடம் அமைக்கப்படவிருந்த இடத்திலே முதற்பொளிவெட்டி அத்திவாரத்தை ஆரம்பித்துவிடலாயினர். இந்தக்கன்னிகாமடம் ஜப்பானிய மாதிரியாய்க் கட்டப்பெற்று, ஜப்பானிலே பியூஜிசாரா நகரைச்சேர்ந்த யேசுவின் திருவிருதய குமாரத்திகளென அறியப்படுகின்ற கன்னியாஸ்திரிமாரின் நிவாசமாய் இருந்துவரும். இவர்கள் கொலோன்நகர பகுதியிலே கடந்தஇரு வருடங்களாகத் தொண்டாற்றிவருகின்றார்கள்.

### கம்யூனிஸ்ததலைவர் கத்தோலிக்கராகின்றார்

ஆட்சிக்குப்பாதகமாய்ச் சாதகமாயுள்ளவைகளைக் கண்டறியத்தக்கதாகக் கத்தோலிக்கசாசனங்களைப் பரிசீலனை செய்யும்படியாய்க் கம்யூனிஸ்த கிழக்குஜேர்மன் அரசாங்கத்தாலே தலைமைவாய்ந்த கம்யூனிஸ்தபிரசாரகரான ஹெர்பேட் ஸ்றேஸ்என்பவர் பணிக்கப்பட்டிருந்தார். ஈற்றில், அவர் ஒரு கத்தோலிக்கராகித் தனது பணியை முடித்தார். மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருச்சபையைத் தழுவிக்கொண்ட காரணமாகக் கிழக்கு ஜேர்மன் கம்யூனிஸ்த கட்சியிலிருந்து இராசிநாமாச் செய்துகொண்ட அதன் முதலாவது விசேஷப்பட்ட அங்கத்தவர் இவரேயென நம்பப்படுகின்றார். "ஆனால், உண்மை அதுவல்ல"என்ற நாமத்துடன் நவமாகப் பிரசுரமாகியுள்ள புத்தகம்ஒன்றிலே சம்பவத்தைத் தெரிவிக்குமிடத்து, கத்தோலிக்கபிரசுரங்களிலே தான்வாசித்தவைகள் படிப்படியாகத் தனதுகண்களைத் திறந்தனவென்று அவர்கூறுகின்றார். அதன்மேல்அவர் மேற்குபேளின் நகரிலே அந்தரங்கமாகத் திவ்விய பூசைகாணத் தொடங்கினார். சென்றகாலத்திலே தான்நடந்துகொண்டதற்குப் பிராயச்சித்தஞ் செய்யும்நோக்கமாகவே முக்கியமாக இந்தப்புத்தகத்தை அவர் வெளியிடலானார். அவர் ஒரு கம்யூனிஸ்தராக இருந்தகாலத்திலே கம்யூனிஸ்தகட்சியில் உன்மத்தமும், யுத்தசந்நதமும், படைத்த ஒருவராயிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்புத் தாண்டவன்வெளித் தபால்

**ஆயித்தியமலை சொல்லுகிறது :**

காடு, மேடு, கற்பார், பற்றைபறுகு, செந்நெற்கழனிகள், கன்னல்சோலைகள், ஆடு மாடு எருமைக்கூட்டங்கள், சிறிய நீரோடை, கிராமவாழ்க்கையை மேற்கொண்டமக்கள் ஆகியவைகளே எனது கடந்தகாலச் சொத்துகள். ஆனால், இன்று என்சரிதையில் புதுமலர்ச்சி. என்மக்களிடையே என்றுமில்லாப் பெருமகிழ்ச்சி. ஏன்? என் ஆண்டவரின் தாயார் என்னிடத்திற் கெழுந்தருளி வந்ததுமுதல் இன்றுவரை நான் அடைந்துள்ள உயர்ச்சியைப்பற்றி எழுதுவது வல்லை. என்றாலும் எழுதுகிறேன்!

உன்னிச்சைத் திட்டத்தைச்சேர்ந்த என்னை ஆயித்தியமலையென அழைப்பர். மட்டக்களப்பிலிருந்து 18 மைல் தூரம் வரையிலுள்ள பலசிற்றூர்களைத் தாண்டி என்னைநாடிவரும் ஆயிரக்கணக்கான பக்தர்களை ஆற்றித்தேற்றுவதற்கும், அவர்களுக்கு வேண்டிய சகாயங்களை அருளுவதற்குமாக இங்கே கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் சதாசகாயநாயகியே எனது இத்தனை பெருமைக்கும் நாயகமாயிருக்கிறார். இங்கு குடியேறியுள்ள கத்தோலிக்கருக்கென அமைக்கப்பட்ட இந்தஆலயம் இன்றுகிழக்கிலங்கைக் கத்தோலிக்கர் அனைவரதும் ஆலயமாகி வாரந்தோறும்புதன்கிழமையிலும், மாதந்தோறும் மூன்றும் ஞாயிற்றுக்கிழமையிலும், வருடந்தோறும் புரட்டாதித்திங்களிலும் பெருந்திரளான பக்தகோடிகளை ஈர்த்துகொண்டு வருகின்றது. இந்த ஆலயத்தை அடியிட்டு, வளர்ச்சியுறச் செய்து, பரிபாலித்துவருகிறவரான கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகளின் அயராதசேவை பாராட்டத்தக்கது. காணிபெறுதல், காடுவெளியாக்குதல், குடிசைக்கோவில் அமைத்தல், அதிசய நீரூற்றையுடைய கிணறு வெட்டப்படுதல், யாத்திரிகர் தேவைக்கான தண்ணீர்த்தொட்டி, குருமனை, நிரந்தரஆலயவேலைகள், சிலுவைமரம், யாத்திரிகருக்கான இடவசதிஆதியாம் இன்னோரன்ன பணிகளில் உடனின்று துணைபுரிந்துள்ள அவரது மகத்தானதொண்டினை என்மண் ஒருபோதுமே மறக்காது.

கடைசியாக இவ்வருடவிழா வைபவத்தையும் சொல்லி என்செய்தியை முடிக்கின்றேன். ஆவணித்திங்கள் 3-ம் ஞாயிறு (21-8-60) ஆதவன்எழுந்தான். அனைவரும்கூடினர். ஆலயமணியின்நாதம் ஆயித்தியமலையை அசைத்துக்கொண்டு தென்றலோடு கலந்தது. மாதாவின்கொடியைப் பரிபாலன சுவாமிகள் ஏற்றிவைத்தனர். அதன்மேல் திவ்வியபூசை, திவ்வியநற்கருணை ஆசீர்வாதத்துடன் விழாஆரம்பமாகித் தினசரி மாலை 6-30மணிக்கு ஆராதனைகள்நடைபெற்று வந்தன. விழாவின் முன்தினங்களிலே பெரும்பரிமளிப் பானகரமாக என் மலை காட்சியளித்தது. புரட்டாசித்திங்கள் முதற்சனிவாரம் 7,000மக்கள் ஒன்றுகூடிச் சதாசகாயமாதாவின் திருச்சுரூபத்தை எரியும் மெழுகுவர்த்திகளுடன் எனதுபிரதேசத்தில் ஊர்வலமாகக் கொண்டுவந்தனர். அதன்மேல் மாலைஆராதனை பாடித் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. திருநாளன்றுகாலை யாத்திரிகர்களின்வசதிக்காக அடுக்கடுக்காகப் பூசைகள்நிறைவேறின. காலை 7-30 மணிக்கு இத்திருப்பதிப் பரிபாலனரான கட்டளைக்குரவரால் திருநாட்பாடற்பூசை நிறைவேறியது. அதன்மேல் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம், நோயாளரை ஆசீர்வதித்தல், திருச்சுரூப சுற்றுப்பிரகாரம், கொடியிறக்குதல், திருச்சுரூபஆசீர்வாதம் என்பன நடந்தேறின. முடிவில் என்மக்களான கத்தோலிக்கரும், பிறசமயத்தவர்களும் ஒன்றுசேர்ந்து மதிய விருந்தளித்து யாத்திரிகர்கள் அனைவரையும் சிறந்த முறையிலே உபசரித்தார்கள். ஈற்றில் இந்தசமூகமான பக்தகோடிகள் அன்னையிடம் விடைபெற்றுத் தங்கள் பதிகளை நாடிச்சென்றார்கள்.

—ஆயித்தியமலைக் கிறிஸ்தவன்

## பொது வர்த்தமானம்

### பாதாளத்தில் வீழ்வது நிச்சயம்

"உலகம் இன்று ஒருபெரும் பிளவின் விளிம்பிலே இருந்துகொண்டு வருகிறது. எங்காவது ஒரு சிறிதளவு அசைவேற்பட்டாலும் உலகம் பாதாளத்தில் வீழ்வது நிச்சயம். உலகில் நெருக்கடிகள் மிகவும் அதிகரித்திருக்கின்றன. ஆயுதப்பரிகாணப் பிரச்சினை தீர்க்கப்படாவிடின் பாரதூரமான பாதகங்கள் விளையலாம். யுத்தம் என்றுவதுஒருநாள் வந்தேதீருமென்று உலக நாடுகள் கருதினால் ஆயுதப் பரிகாணப் பேச்சு அர்த்தமற்றதாகும்." இந்திய பாராளுமன்றத்தின் மக்கள்சபையிலே இந்திய வெளிவிவகாரக் கொள்கை பற்றிய விவாதத்தை ஆரம்பித்துவைத்துப் பேசியபோது இந்திய பிரதமர் நேரு இவ்விதம் கூறினர்.

### உலகின் குடிசனத்தொகை

இன்று உலகமுழுவதிலும் 290 கோடிமக்கள் உயிர்வாழ்கின்றனரென்றும், அவர்கள் தொகை வருடந்தோறும் 4 கோடியே 80 லட்சம் பேர்விகிதம் அதிகரித்துவருகிறதென்றும் ஐக்கியநாடுகளின்சபை இவ்வாண்டிற்கான தனதுஅறிக்கையில் தெரிவித்திருக்கின்றது. உலகசனத்தொகையில் அரைவாசிக்குமேற்பட்டோர் நான்குதேசங்களில் வசிக்கின்றார்கள். அவைகளிலே சீனாவில் சுமார் 60 கோடிபேர். இந்தியாவில் 40 கோடிபேர். சோவியற் ருஷியாவில் 21 கோடிபேர். ஐக்கிய அமெரிக்கதேசத்தில் 18 கோடி பேர். ஆபிரிக்காக்கண்டந்தான் பிறப்புவிகிதத்தில் அதிகம்கூடுதலானது. அதாவது ஒவ்வொருஆயிரம்பேருக்கும் 46 பிறப்புகள். ஐரோப்பாக்கண்டத்தின் பிறப்புவிகிதம் ஆயிரவருக்குப்19என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

### அணுக்குண்டால்அழிவுற்ற ஹிரோஷிமா

ஜப்பானிலே இற்றைக்குப்பதினைந்து வருடங்களின்முன்வீசப்பட்ட உலகின் முதலாவதுஅணுக்குண்டினால் ஹிரோஷிமா நகரில் உயிரிழந்த 78,000 பேராலும் அந்நகர்மேற்றிராணியார் சென்ற ஆவணிமாதம் 6-ந் திகதியன்று திவ்வியபூசை நிறைவேற்றினர். திரும்பவும் கட்டியெழுப்பப்பட்டுள்ள இந்த நகரின் கட்டடங்கள் எல்லாவற்றிற்கும் மேலாய் உயர்ந்தோங்கிநிற்கும் சமாதான ஞாபக ஆசனக்கோவிலானது மோட்சாரோபண மாதாபோல் பிரதிஸ்டைசெய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆசனக்கோவில் அணுக்குண்டுத் தாக்குதலின்போது நிர்மூலமான சிறிய மரச் சிற்றாலயத்தினிடமாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அப்போது அந்நகரில் இருந்துவந்த கத்தோலிக்க சமூகம் 150 பேர்வரைதான் கொண்டிருந்தது. இவர்களிலும்அநேகர் வெடிகுண்டுவீச்சின்போது உயிரிழந்தார்கள். இவர்கள் ஆராதனை வழிபாடு நடத்திவந்த அந்தத் தனிச்சிற்றாலயத்தின் இடிகரையான பகுதியில் இன்று பெரிய ஆசனக்கோவில் ஒன்றும், மற்றும் அந்நகரிலே எட்டுப் பங்குவிசாரணைப் பிரிவுகளும் இருக்கின்றன. கடந்த பதினைந்துவருடங்களிலும் இரு உயர்தர கலாசாலைகளும் அங்குகட்டப்பட்டிருக்கின்றன.

* * *

● வௌவால்களும், ஆமைகளும் இருட்டிலே வழிகண்டு பிடிப்பதுபோலப் பார்வைஇழந்தவர்களும் வழிகண்டுபிடித்துக்கொள்ள உதவும் கருவி ஒன்று சமீபத்திலே பிரித்தானியின் வருடாந்த றேடியோக்கண்காட்சியிலே முதன்முறையாகக் காட்சிக்கு வைக்கப்படலாயிற்று. சோந்தர் என்பதே இக்கருவியின் பெயராம்.

## திரு. தா. வேலுப்பிள்ளை மனுவேற்பிள்ளை அவர்களின் தேகவியோகம்

ஏழாலை- சூராவத்தையூரில் சீரும், செல்வாக்குமுள்ள குடும்பத்தில் உதித்து வேலுப்பிள்ளைஎன்றும் சாதாரணமாய்த் தம்பித்துரையென்றும் அழைக்கப்பட்டு வந்த இளைப்பாறிய எவ். பி. எல். திரு. தா. வேலுப்பிள்ளைஅவர்கள் சிலகாலம் இரத்தக்கொதிப்புநோயால் பீடிக்கப்பட்டிருந்து, கடந்த 31-8-60 புதன்கிழமை சாயந்தரம் 6மணியளவில் தமது 67-வது வயதில் மரணத்திரையில் மறையலானார்.

இவர் சூராவத்தையில் காலங்கண்ட பெரியாராய் வாழ்ந்து பரமபதஞ்சேர்ந்த திரு. தாமோதரம்பிள்ளை மிக்கேல்உபாத்தியாயர்அவர்களின் செல்வப்புதல்வர். யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார்கல்லூரிப் பழையமாணவர். தமது உத்தியோக சேவைகாலத்தில் அரசாங்கசட்டத்துக்கமைந்து, கடவுள்நியமத்துக்குப்பணிந்து, அன்பு, இரக்கம், நீதி, தெய்வபக்தியுடையவராய்த் தமதுகடமையைத் திறம்பெறஆற்றிவந்து அரசாங்கத்திலும், உற்றார், அயலார், உறவினர்மத்தியிலும் நன்மதிப்புப் பெற்றிருந்தார்.

இவருடைய தர்மபத்தினி அச்சுவேலி திரு. வஸ்தியாம்பிள்ளையின் புதல்வியும், பலராலும் நன்கறியப்பெற்ற பத்திராதிபர் தம்பிமுத்துப்பிள்ளை சூசைப்பிள்ளையின் பேர்த்தியுமான திருமதியோசேப்பின் நேசமணியாவர். செல்விசோதிமலர் மேரிஜூசியா இவருடைய சுவிகாரப்புத்திரியாவர். மலாயாவிலே புகையிரத நிலைய அதிபராய்க்கடமையாற்றி இளைப்பாறிய திரு. தா. ஆறுமுகம் யோசேப்பு அவர்கள் இவரின் சிரேஷ்டசகோதரர். புகையிரதப்பகுதி ஏ.பி.எல். யோண் நீக்கலஸ் பஸ்தியாம்பிள்ளை, புகையிரதப் பாதுகாவலர் விக்றர் வஸ்தியாம்பிள்ளை என்பவர்களுக்கு மைத்துனரும், சங்.மதர் மேரி ஏணெஸ்ரின் அவர்களுக்கு மாமனருமாவர்.

மறுநாட்சாயந்தரம் இவருடைய பூதஉடல் அழகியபேழையில்வைத்து மோட்டர்வாகனத்திலே வண. பிரான்சிஸ்சேவியர்சுவாமியவர்கள் துக்கசங்கீதம்பாடிச் செல்ல, இனசனர்சிநேகிதர் புடைசூழச் சூராவத்தை, அர்ச். தெரேசம்மாள்கோவில் கொண்டுசென்று அந்திமதிருச்சடங்குகள் நிறைவேறியபின் சேமக்காலை கொண்டுசென்று சுவாமியவர்களின் இறுதிஆசீர்வாதத்துடன் பூமதானஞ் செய்யப்பெற்றது.

"இவருடையஆன்மா தேவனில் இளைப்பாறுக."

## கொழும்புத்துறை பழையமாணவர் சங்க நிர்வாகசபை

மேற்படிநிர்வாகசபை கொழும்புத்துறைத்தாபனத்தில் 3-9-60சனிக்கிழமை முற்பகல்10மணியளவில் கூடியது. அவ்வேளை அரசாங்கம் உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளைப் பொறுப்பேற்பதுபற்றி ஆராயப்பட்டபோது பின்வரும்அம்சங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

இலங்கைச்சரித்திரத்தில் என்றும் பொன்அட்சரத்தால் இடம்பெற்றுள்ள ஒருவிடயம் உண்டானல், அதுதான் எங்கள் மக்களுக்கு மதஸ்தாபனங்கள் உதவிநன்கொடைபெறும் பாடசாலை மூலம் செய்துவருகின்ற அளப்பரும் அரும்பெரும் சேவையாகும்.

எதிர்காலத்தில் மக்கள் நற்பிரசைகளாக வாழவேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் இராப்பகலாக உடல், பொருள், ஆவிஅத்தனையையும் அர்ப்பணம்செய்யும் ஸ்தாபனங்கள் மதஸ்தாபனபாடசாலைகள்என்பதைஎல்லோரும் ஒப்புக்கொள்வர். கல்விப்பகுதியாரின் அறிக்கையே மதஸ்தாபன பாடசாலைகளின் கல்விநிலை சிறந்ததெனக் கூறும்போது, அரசாங்கம் பாடசாலைகளை எடுத்துநடத்தத் தீர்மானித்திருப்பது எவருக்கும்புரியாத ஒருபுதிராகவே இருக்கிறது. நல்லகல்விக்கும், நல்ல ஒழுக்கத்துக்கும், நம்பிக்கைக்கும் இருப்பிடமாக இருப்பதினாலல்லவா பெற்றோர் இப்பாடசாலைகளை வெகுவாக விரும்புகின்றார்கள். எல்லாச்செல்வங்களிலும் சிறந்தசெல்வமாகிய பிள்ளைச்செல்வத்தில் பெற்றோரைவிட யார்தான் கூடியஅக்கறை கொள்ள முடியும்? தேசசேவையையே தமது சேவையாகக் கொண்டுள்ள சமயஸ்தாபனபாடசாலைகளின் உரிமைகளிலே—தமதுபிள்ளைகளே தங்கள்கதியென வாழும் பெற்றோரின் உரிமைகளிலே அரசாங்கம் இவ்வளவுஅவசரமாகக் கைவைப்பதை உலகம்ஒருபோதும் வரவேற்காது. நீண்டகாலம் நன்மைபுரிந்த மதஸ்தாபனங்களை எடுக்கும்போது அதன் நன்மைதீமைகளைப்பற்றி ஒரு நீண்டசிந்தனை செய்யாமல்விடுவது மிகவும்வருந்தத்தக்க விஷயமாகும். ஒரு சிறப்புக் குழுவையாக்கி இவ்வாலோசனையை ஆராயவிடுவதே மிகவும்சிறந்ததும், பாதகமில்லாததும், உலகம்ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான வழியாகும்.

இதன்பின் "அரசாங்கம் மதஸ்தாபனபாடசாலைகளை எடுத்துநடத்துவதற்குமுன் கல்விநிபுணர்களைக்கொண்ட ஒருஆலோசனைச் சபையினரால் இவ்விடயம் பரிசீலனைசெய்யப்பட்டுத் தீர்மானிக்கப்படவேண்டுமென்று கௌரவ பிரதமமந்திரியையும், கனம் கல்வி மந்திரியையும் கேட்டுக்கொள்கிறது." என்னும்தீர்மானம் சபையினரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

— நிருபர்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2153**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

நல்லூர்

1. இராமலிங்கம் கனகசபாபதியும்,
2. பெண் சிதம்பரவல்லியும்.

— வழக்காளிகள்.

எதிராக, கொழும்புத்துறை கணபதிப்பிள்ளை செல்லையா

— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2153-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகள் 1960-ம் ஆ அக்டோபர் மாதம் 22-ந் திகதி (22-10-60) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 2508/- ம், இன்னும் ரூபா 1500/-க்கு 8-4-1958 தொடக்கம் 19-6-1958 வரையும் 100 க்கு 10% வட்டியும் பின்பு கூட்டுத்தொகைக்கு 19-6-58 தொடக்கம் இறுபடும்வரையும் 100 க்கு 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 191 சதம் 61.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோயிற்பற்று கொழும்புத்துறை இறைநொச்சியடி வயல் ப. நெ. இ. 5-ம் குளி $2\frac{3}{4}$ அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு—பின்னற் சொல்லப்படும் 2-ம் காணி. வடக்கு—கணபதி தில்லைநாதருக்கும், சின்னப்பு பெண் சின்னப்பிள்ளைக்கும் உரியகாணி. மேற்கு—செல்லத்துரை பெண் இராசம்மாவின் காணி. தெற்கு—றோட்டு. இதடங்கலும்.

2. மேற்படி கொழும்புத்துறை இறைகடற்கரை வயல் ப. நெ. இ. 3 ம் குளி $1\frac{3}{4}$ அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கும், தெற்கும்—றோட்டு. வடக்கு—சின்னப்பு பெண் சின்னப்பிள்ளையின் காணி. மேற்கு — மேற்சொல்லப்பட்ட 1-ம் காணி. இதடங்கலில் சொரியலாய் அரைவாசி.

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனர்.

நம். 35, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 12-9-60

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அதிகாலையில் எங்கே போகிறான்?

(முன்தொடர்ச்சி)

“நல்லது தம்பி, நீ சொன்னது போல நாளையதினம் அதிகாலை சின்னயேசுவைச் சந்திப்பதற்காயத்தமாய் எனது மனையின் வெளிவாயிலிலே உன்னை வழிபார்த்துக்கொண்டிருப்பேன்” என்று சொல்லி ஆபேல் பெரிதும் அக்களிப்புடன் பேணாட்டைச் சந்தோஷமாக வழியனுப்பி வைத்தாரல்லவா? அதன்மேல் அவர் தனது மனையில் பிரவேசித்துத் தன்வசமிருந்த உடைகள் பலவற்றிலே தனக்கு அதிகம் உகந்ததைத் தெரிந்தெடுத்து, அதைச் செம்மைப்படுத்தினார். ஒரு சோடி பாதரட்சைகளை எடுத்து மினுக்கி அழகுபடுத்தினார். தொப்பி ஒன்றை எடுத்துச் சிரசில் வைத்து அளவுபார்த்தார். பின்னர் அவைகளைப் பக்குவமாக ஓரிடத்தில் வைத்துவிட்டுத் தனது கரங்கள் இரண்டையும் பின்கட்டாகக் கட்டி எதையோ சிந்தித்தபடியே அங்குமிங்குமாய் அமைதியாக உலாவிக்கொண்டிருந்தார்.

ஆபேல் வழமைபோல இராப்போசனத்தை முடித்துக்கொண்டு முன்போலவே சிறிதுவேளை உலாவிவிட்டுப் படுக்கையண்டை சென்றார். ஒருபுறமாகச் சரிந்துபடுத்தார். ஆனால், நெடுநேரஞ்சென்றும் அவர் கண்ணயரவில்லை. அவருக்குக் கண்ணுறக்கம் வரவேயில்லை. சேவல் எப்போது கூவும்? பொழுது எப்போது மலரும்? அதிகாலையில் பேணாட் நிச்சயமாக வருவான்; அவன் என்னையும் அழைத்துப் போவான்; நானும்வந்து தம்மைச் சந்திக்கவேண்டுமென்று சின்னயேசு ஆசிக்கிறாரென்று அவன் தெரிவித்தானே என்ற சிந்தனைகளாலே உளம் காற்றாடிபோல் சுழன்றுகொண்டிருக்கும்போது அவருக்குத் தான் உறக்கம் ஏது? ஆனால், அவருடைய மனையின் சுவரில் தொங்கும் பெரிய கடிகாரம் வழமைபோல டக், டிக், டொக்விளையாடிக்கொண்டிருந்து அன்றிரவும் உறங்க நினையாது ஒன்பது, பத்து, பதினொன்று அடித்துப் பொழுது விடிய இன்னும் அதிக நேரம் இருப்பதாக அவருக்கு மணிக்கணக்கைக் காட்டிக்கொண்டிருந்தது. அதனால் ஆபேல் தாத்தாவுக்கு அந்த ஓர் இராவும் ஒன்பது இராப்போல் இருந்தது.

ஆயினும் நித்திரையை ஏமாற்றிக்கொண்டிருந்த அவருடைய சிந்தனைகளைக் கடைசியாகநித்திரையே ஏமாற்றிவிட்டது. ஆதலால் அவர் சிலமணிநேரம் தன்னை அறியாமலே அயர்ந்து நித்திரை போயினார். என்றாலும் அதிலே கனவு அவரைச் சும்மா விட்டுவிடவில்லை. பேணாட் வந்து தனது அறைக் கதவில் தட்டி, “என்ன ஆபேல் தாத்தா, இன்னமும் நித்திரையா? இன்றைக்கும் நீடிய நித்திரையா? எழுந்திருங்கள்; சின்னயேசு வந்து அதோ காத்துக்கொண்டிருக்கிறார்” எனச் சொல்வதாகவும், காலநேரத்துடன் கண்விழித்தெழுந்து ஆயத்தமாக வெளிவாயிலண்டை காத்துக்கொண்டிராததாலே பேணாட் தன்னைக் கைவிட்டுப் போனதாகவும், தான் ஒரு கடலோடியாய் இருந்தகாலையில் எத்தனையோ வருடகாலம் இரவும் பகலுமாக எத்தனையோநாள் நித்திரையேயின்றிக் கண்விழித்திருந்த தன்னை அன்றிரவு அந்தப்படுபாதக நித்திரை ஏமாற்றிவிட்டதாகவும் கனாக்கண்டுகொண்டிருந்த ஆபேல் அதிகாலை நான்கு மணிக்கு யாரோ தட்டியருட்டிவிட்டதுபோல் கண்விழித்தெழுந்தார். அங்ஙனம் அவர் விழித்தெழுந்ததும், மணி நான்கு அடித்ததும் சரியாயிருந்தது. சரியானவேளையில் தான் துயில்விட்டெழுந்ததையிட்டு ஆபேல்தாத்தா ஆனந்தமடைந்தவராய்ப் படுக்கையண்டை முழந்தாட்படியிட்டுச் சிறிதுவேளை ஏதேதோவெல்லாம் சொல்லிக்கொண்டிருந்துவிட்டுப் பின்னர் எழுந்து ஆகவேண்டிய ஆயத்தங்களைச்செய்தார். கடைசியாகத் தான்சித்தஞ்செய்திருந்த உடையையும், பாதரட்சையையும் அணிந்தார். தொப்பியைஎடுத்துச் சிரசில்போட்டு, ஊன்றுகோல்ஒன்றைக் கையில்பிடித்துக்கொண்டு வெளிவாயில் கதவைநோக்கி ஓர் துரைமகன்போன்று உல்லாசமாகநடந்துசென்றார். கதவைத்திறந்து அங்குமிங்குமாகவீதியை நோக்கியதும் அவர்கண்டகாட்சி அவரைத் தூக்கிவாரிப் போட்டதுபோல் அத்துணைமாட்சியாயிருந்தது. ஒருபால் கண்கொண்டு பார்க்கமுடியாத அழகுப்பொலிவுடன்—சுடர்வீசும்திருவதனத்துடன் சின்னயேசுவும், மறுபால் சிறுவன்பேணாட்டும் தன்னைவரவேற்க எதிர்கொண்டு வருவாரைப்போன்று எதிர்முகமாகவரக்கண்டதே ஆபேல் தாத்தா பெரிதும்ஆச்சரியவசத்தராய் ஒருகற்சிலையேபோன்று ஸ்தம்பித்துப் போய்நின்றார். அப்போது, “ஆபேல், இன்று உன்னைச்சந்திக்கவென்றே நான் வருகிறேன்” என்றவார்த்தைகள் அவர் சிந்தைதளிரும்படியாய் இன்பத்தேன் மொழிகள்போல் அவருடைய செவிகளில் விழுந்தன.

தேனாமிர்தம்போலும் தனதுசெவிகளில்விழுந்த இத்திவ்வியமொழிகளால் ஆபேல் உள்ளமுருக, உணர்ச்சிபெருகத்தன்னையேமறந்தவராய் என்ன செய்வதென்றறியாது சிலகணங்கள்வரை திகைத்துநின்றார். பின்னர் தன்னைச்சந்திக்கவென்று எதிர்கொண்டுவந்த சின்னயேசுவை வரவேற்க முனைந்தார்போல் இருகரங்குவித்து நின்றவிடத்திலேயே நெற்றிதரையில்பட நிலத்தில் தீர்க்கதண்டனாகவீழ்ந்து அவரைவழிபட்டுநின்றார். அதன்மேல் எழுந்துநின்று அன்புபெருக, ஆனந்தம்பெருக, இருகரங்களையும் குவித்தபடியே ஆசாரத்துடனும், அதிகபக்திவிநயத்துடனும் முழந்தாளால் முன்னடந்துசென்று சின்னயேசுவை இன்னுமோர்தரம் வணங்கித்தொழுது, அவருடையபாதகமலங்களை ஆசைதீரமுத்தமிட்டு—இருகன்னங்களாலும் அருவியெனப்பெருகிவழிந்த அன்பின்கண்ணீரால் கழுவித்துடைத்து முத்தமிட்டு எழுந்துநின்றார். பின்னர் புன்முறுவலுடன் சின்னயேசு பொன்னொளிவீசிக்கொண்டு முன்னடந்துசெல்ல, பேணாட்டும், ஆபேலும் பயபக்தியுடன் அவரைப் பின்தொடர்ந்துசெல்ல, மூவரையுங்கொண்ட இச்சிறியஊர்வலம் அந்த வீதிவழியே செல்லுகின்றது. அது எங்கே செல்லுகின்றது? ஏன் செல்லுகின்றது?

(அடுத்த இதழில்)

● செஞ்சீனாவிலிருந்து தப்பியோடிய சீன அகதிகளைப் பராமரிப்பதற்கென்று ஹொங்கோங்தீவிலே ஒரு புதிய ஆஸ்பத்திரி கட்டப்பட்டு வருகிறது. ஹொங்கோங் அரசினராலே அங்கு குடியேற்றப்பட்டுள்ள ஐந்துலட்சம் சீன அகதிகள் வசிக்கும்பகுதியிலே மறினோல்மாதாவின் நாமத்தினால் இது கட்டப்படுகிறது. இதனை மறினோல் சபைக் கன்னியாஸ்திரிமார் நடத்தி வருவார்கள்.

# தாம் ஓர் கிறீஸ்துவர்தானா?

(முன்தொடர்ச்சி)

“தங்கைச்சி, என்னைமன்னித்துவிடு; நீ ஒருபெண்பிள்ளை; சிலவேளை பெண்மனம் பேதலிக்குமென்று நினைத்துத்தான் அப்படியெல்லாம் சொன்னேன்; குறைவிளங்கவேண்டாம்” என்று தமையன் மார்த்தீனாளைச் சமாதானப்படுத்தியதே அவள் தன்உள்ளத்தில் அலையாகப் பொங்கியெழுந்த ஆத்திரம் தன்னைஅறியாமலே சட்டென அடங்க, வதனத்தில் புன்னகைதவழ, அவனை ஓர் அன்புப்பார்வை பார்த்துவிட்டு, “என்ன அண்ணா! நானாஉங்களை மன்னிக்கவேண்டும; ஏன்? தங்களை அண்ணனென்றும் மதியாது சற்றே கடுகடுத்துப்பேசியதால் குற்றவாளிநான்தானே! அதனால் நீங்கள்தான் உங்கள் அருமைத்தங்கைச்சியை மன்னிக்கவேண்டும்” என்று கண்கள் இரண்டும்கலங்கத் தனதுஉடன்பிறவியின் கரங்களைப்பற்றிப்பிடித்துப்பதிலுக்குப்பதில் முத்தமிட்டு ஆனந்தபாஷ்பம் சொரிந்தாள். இந்தஉருக்கமான காட்சியைப் பார்த்துநின்ற பிரபு தம்பதிகளின்உள்ளம் மெழுகாய் உருகியதெனில் மிகையாகுமா?

நிற்க, அரசகட்டளைப்படி தீயஸ்பிரபுவின் புதல்வியைத் தனியஅழைத்துப்போகவந்த படைத்தலைவன் அவளைநோக்கி, “பிள்ளாய்! உன்தம்பியைப்போல நீயும் உனது ஆருயிரை இழந்துவிடாதே; மதியீனமாக நடந்துகொள்ளாதே; உனது அழகுசௌந்தரியத்தைப்பார்; உன் தாய் தந்தையருக்கு நீ தான் அருமருந்தன்ன அருமைப்புதல்வி என்பதைச் சிந்தித்துப்பார்; இந்தஅலங்காரமனை உனக்கேஒருகாலம் உரிமையாகும்என்பதை நீ அறியாததென்ன! இதிலே எதிர்காலத்தில் நீஅடையவிருக்கும் இளங்காதலனுடன் ஓர்அழகுஇராணியாய்ச் சுகானுபோகங்களுடன் வாழவேண்டியவள்என்பதை நீ இன்னமும் நினையாததென்ன! ஆதலால், பிள்ளையே உனதுநன்மைக்காகத்தான்—உனதுநல்வாழ்வைக் கருதித்தான் சொல்லுகிறேன்; அரசனின்விருப்பப்படி, முந்தியநாள்வந்த கிறீஸ்துவேதத்தை மறுதலித்துவிட்டு, எம்முன்னோரின்சமயத்தை மறுபடியும் தழுவிக்கொள்; அப்போது நீ அரசனின் நன்மதிப்பையும், சன்மானத்தையும் அடைந்துகொள்வாய்; அரசனே உனக்குப் பொன்னாபரணங்களும், பீதாம்பரங்களும், நவரத்தினங்களும், முத்தாரங்களும் சந்தோஷஞ்செய்யவிருக்கிறான்; ஆதலால், நல்லபிள்ளையைப்போல என்சொல்லைக் கேட்டு நடப்பாயென நம்புகிறேன்” என்று தேன்போலமொழிந்தான்.

இவைகளையெல்லாம் செவியாரக் கேட்ட மார்த்தீனாள் நாணத்தினால் சிறிதுவேளை தலைகுனிந்து மவுனமாயிருந்துவிட்டு, பின்னர் படைத்தலைவனை ஏறவிறங்கப்பார்த்துவிட்டு, “ஓர் இளம்பெண்ணென்று நினைந்துதான் இந்தமாதிரியெல்லாம் தந்திரமாகப் பேசி என்னைஏமாற்றிவிட வந்தீர்போலும்; இத்தகைய ஆசைவார்த்தைகளால் மோசம்போகக்கூடியவள் நான் அல்ல; முத்தாரங்களையும், நவரத்தினங்களையும், பொன்னாபரணங்களையும், பீதாம்பரங்களையும் என்முன்பாகக் கொண்டுவந்து மலைபோலத்தான் குவித்தபோதிலும் நான் மனம்மாறப்போவதுமில்லை; கிறீஸ்துவேதத்தை மறுதலிக்கப்போவதுமில்லை; மெய்யங்கடவுளென நான்கண்டுகொண்ட—மெய்ம்மறையென நான்கண்டு ஏற்றுக்கொண்ட கிறீஸ்துநாதரைக் காட்டிலும், கிறீஸ்துவேதத்தைப்பார்க்கிலும் எனது அழகுசௌந்தரியம் பெரிதல்ல; இந்தஅலங்காரமனை பெரிதல்ல; உலகசுகானுபோகம் பெரிதல்ல; இவைகளெல்லாம் மேகத்து மின்னலைப்போலும், நீர்மேற் குமிழிபோலும், பரிதிமுன் மறையும் பனிபோலும் நிலையற்றன; ஒருநாள் இழந்துபோகவும், அழிந்துபோகவும்கூடியன; அதனால், அழியாதஎனது ஆத்துமத்தை இழந்துபோவதிலும் இறந்துபோவதேமேல்; ‘மனிதன் உலகமுழுவதையும் ஆதாயமாக்கிக்கொண்டாலும் தனது ஆத்துமத்தை இழந்துபோனால் அவனுக்கு வரும் இலாபம்என்ன?’ என்பது அமலன்கிறீஸ்துவின் மணிவாக்கு. ஆகவே, நான் உண்மையைத்தான் சொல்லுகிறேன்; நான் கிறீஸ்துவேதத்தைக் கைவிடவேமாட்டேன்; அதற்காக எனக்குள்ளதையெல்லாம் தியாகஞ்செய்யச் சித்தமாயிருக்கிறேன்; எந்தவிதமான வாதைவேதனையையும் படஅனுபவிக்கவும், பிராணனைத்தானும் கொடுக்கவும் திடசங்கல்பம் செய்துள்ளேன்” என்று வீரகர்ச்சனை செய்துநின்றாள்.

மார்த்தீனாள் இவ்விதம் உத்தண்டத்துடன் கூறியமொழிகள் படைத்தலைவனின்உள்ளத்தைக் கூரிய அம்புகள்போல் பாய்ந்துஊடுருவின. அதனால் அவன் மனத்திலெழுந்த வேதனையின் சாயல் முகத்தில்பிரதிபலித்தது. என்றாலும், அவன்மனோதைரியத்தை மறுபடியும் தருவித்துக்கொண்டு, மார்த்தீனாள் மேல் மனமிரங்குவான்போல் அவளைப் பட்சமாகவிழித்து, “பிள்ளாய்! வசந்தகாலத்து அழகியபுஷ்பம்போலும், அன்றேமலர்ந்த புதிய மலர்போலும் எழிலுற்றுவிளங்கும் ஓர்இளமங்கையாகிய நீ கண்டதுண்டமாகக் கீறிக்கிழிபட்டு, மானபங்கமடையப் போகிறாயேயென்று நினைக்கும்போது எனதுஉள்ளம் சஞ்சலம்கொள்ளுகின்றதே; தீயஸ்பிரபுவின் சிங்காரமிகுந்த பூங்காவில்மலர்ந்த இளம்பூங்கொடியாகிய நீ கொடியவாதை வேதனைக்குள்ளாய் வாடிவதங்கி, அநியாயமாக மடிவதென்றால் எவர்மனம்தான் பதைபதையாதிருக்கும்; ஆதலால், யுக்தியுள்ள பிள்ளையாயிருந்தால் நான்சொல்லும் புத்தியைக்கேள்; கிறீஸ்துவேதத்தை மறுதலித்துவிடுகிறேனென்று ஒரு வார்த்தை மாத்திரம்சொல்; வாடாத மல்லிகைப் புஷ்பம்போலச் சௌபாக்கியவதியாய் நீவாழ்ந்திருப்பாய்” என்று பரிவாகவசனித்தான்.

படைத்தலைவன் பரிவாகவசனித்த மொழிகளைக் கேட்டதே சூரியமுகங்கண்டுமலரும் செந்தாமரைப் புஷ்பம்போன்று மார்த்தீனாளின் வதனமும் மலரச் சிறுபுன்முறுவலுடன் அவனை நோக்கி, “வசந்தகாலத்து அழகிய புஷ்பமாய் இருந்தாலென்ன! அன்றே மலர்ந்த புதியமலராய் இருந்தாலென்ன! காலையில் மலர்ந்தபுஷ்பம் மாலையில் வாடிவிழும்; ‘மனிதனின் சகல வடிவழகும் வயலில் இருக்கும் புஷ்பம்போல் இருக்கிறது; புல்லுக் காய்ந்துபோம்; புஷ்பம்வாடிப்போம்’ என்பது திருவாக்கு. கனாப்போன்று மறைந்துபோகும் அழகையும், இளமையையும் கானலை நீரெனநம்பி அலையும் மானைப்போன்று நானும் மதியீனமாக நம்பிக் கெட்டழியப்போவதில்லை; நிசமாகத்தான் சொல்லுகிறேன்; எந்தவிதமானபங்கம் ஏற்பட்டபோதிலும், என்னவிதமான கொடியவாதை வேதனைக்குட்பட்டபோதிலும்கிறீஸ்துவேதத்தை நான் மறுதலிக்கப்போவதேயில்லை; இதுநிச்சயம்” என்று காம்பீரமாகச் சாற்றினாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**புரட்டாசி — 1960**

ஞா 18 பெந்தக்கோஸ் தின் பின் 15-ம் ஞாயிறு (அர்ச். குப்பேர்தீனோ ஞசையப்பர் ஞா.) (வி. ம.) [ப]

திங. 19 அர்ச். யனுவாரியாரும் தோழரும் சி]

செ. 20 அர்ச். எயுஸ்தாக்கியார் தோழர் [சி]

புத. 21 அர்ச். மத்தேயு(சதுர்கால புதன் ஞா.) (வி. ம.) திரிகோணமலை மேற்றிராணியாருக்காகச் செபம்) [சி]

வி. 22 அர்ச். வில்லனோவா தோமையார் (அர்ச். மௌரீசியார் தோழர் ஞா.) [வெ]

வெ. 23 சதுர்கால வெள்ளி(அர்ச். லீனப்பர் ஞா.) [ஊ]

சனி. 24 உபகாரமாதா திருநாள் (சதுர்கால சனி ஞா') (வி. ம.) [வெ]

சத்திய வேத

**பாதுகாவலன்**

1960-ம் ஆண்டு
புரட்டாசிமாதம் 15-ந் திகதி

## கல்விச் சுதந்திரம்

சமயஸ்தாபன பாடசாலைகளை அரசாங்கம் தனதுபொறுப்பில் எடுக்கும் நடவடிக்கையானது மக்களின் அரசியல், சமய உரிமைகளைப் பறித்தெடுக்கும் ஒருநடவடிக்கையாகும். இது ஜனநாயக நாடுகளில் வரவேற்கத்தக்கதல்ல. தங்கள்பிள்ளைகளுக்குத் தாங்கள் விரும்பும்கல்வியை ஊட்டுவது பெற்றாரின்உரிமை. இந்த உரிமையை மறுப்பது ஐக்கியநாடுகளின் சாசனத்துக்கும், ஜனநாயகத்துக்கும் முற்றிலும்மாறானது. சமயஸ்தாபனபாடசாலைகளை அரசாங்கம்எடுப்பதால் சமய சுதந்திரம் பாதிக்கப்படுகிறது, இல்லை, அச்சுதந்திரம் பறிக்கப்படுகின்றது. எந்தநாட்டில் சமய சுதந்திரம் பறிக்கப்படுகின்றதோ அந்நாட்டில் ஜனநாயகம் சரிவர இயங்கமுடியாது.

சமயஸ்தாபனபாடசாலைகளை அரசாங்கபாடசாலைகளாக்குவதாலே வருங்காலசந்ததியினருக்குப் பெருங்கெடுதியுண்டாவது மாத்திரமல்ல, அவர்களின் எதிர்காலம் இருள்சூழ்ந்ததாயும் இருக்கும். ஆகவே, பிள்ளைகள் தங்கள்சமயசூழ்நிலையில் வளர்க்கப்படுவதும், கல்விபயிற்றப்படுவதும் அவசியம். இந்தஅவசியத்தை அரசாங்கம் இன்னுமே உணர்ந்ததாயில்லை. சமயஸ்தாபன பாடசாலைகள் அரசாங்க பாடசாலைகளாக மாறும்போது என்னநடக்கும்? பிள்ளைகளின் கதி என்னவாகும்? என்பதைக் கம்யூனிஸ்தர்கள் முதலாம் மாக்ஸீயவாதிகள் அறிந்துள்ளதுபோல் அரசாங்கமும் அறிந்துகொண்டால் இத்தகைய ஒரு தீவிரநடவடிக்கையில் அது இறங்கவேமாட்டாது.

"கல்வியிலேஅரசாங்கம் தனி உரிமைபாராட்டுவது கல்வியின் சுதந்திரத்திற்குப் பேராபத்து விளைக்கும்; கல்வியிலே அரசாங்கமும், சமயஸ்தாபனங்களும், ஏனையகுழுவினரும் ஈடுபடுவதால் கல்விவளம்பெற்றுச் சுதந்திரத்துடன் விளங்குகின்றது; குடியரசுநாடுகள்எதிலும் இத்தகைய கல்வித்தனியாட்சி இடம் பெறுவதில்லை; அரசாங்கம்முற்றாகக் கல்விச்சாலைகளை எடுத்து நடத்துவதென்றால் கல்வி தனது சுதந்திரத்தை இழந்து ஹிற்லர், முசோலினிபோன்றவர்கள் நடத்திய கொடுமைகளுக்கு இலக்காகும்; இத்துணை விரைவிலே பாடசாலைகளை அரசாங்கம் கைப்பற்றுவது குடியாட்சிமுறையுமன்று; கல்வித்திருத்தமுமன்று; இலங்கைக் கல்வித்திட்டத்திலே பலதிருத்தங்கள் வேண்டும்; ஆயினும்இவ்வாது அரசாங்கம் பாடசாலைகள் அனைத்தையும் எடுத்துநடத்துவது அத்திருத்தங்களுக்கு இடையூறாக முடியும்" என்று உலகஅனுபவம்படைத்த பெரியகல்விமான்ஒருவர் கூறியிருப்பதைச் செவியில்விழுத்தி அரசாங்கம் சற்றேசிந்திக்க வேண்டும்.

நிற்க,கடந்தசிலவாரங்களாக ஏற்பட்டிருந்த நெருக்கடியான இருள்சூழ்ந்தநிலைமையிலே நம்பிக்கைதரும் சுடரொளியொன்று பிறந்திருக்கிறது. இது மற்றெவரிடமிருந்தும் அல்ல, ஆனல்; கல்விமந்திரியிடமிருந்தே பிறந்திருக்கிறது. எமதுநாட்டிலே அறிஞர்களென்று இருப்பவர்கள்சிலரால் சண்டவேகத்துடன் எதிர்க்கப்பட்டதும், மறுக்கப்பட்டதுமான அடிப்படைத் தத்துவம்ஒன்றை அத்துணைதைரியமாகவும், தங்குதடையில்லாமலும் பகிரங்கமாகஅறிக்கையிட்டதற்காகக் கல்விமந்திரி பாராட்டப்படவேண்டியவரே. "ஒருநாட்டிலுள்ள பிள்ளைகளுக்கு ஊட்டப்படவேண்டிய கல்வியை நிர்ணயிக்கவேண்டியவர்கள் முக்கியமாகப் பெற்றோரும், பாடசாலை ஆசிரியர்களுமே" யென்று அவர் பிரசித்தமாக அறிவித்திருப்பதிலிருந்து அவருக்குநியாயம் புலப்பட்டிருப்பது நன்குபுலனாகின்றது.

இலங்கையையும் அங்கத்துவம் வகித்துள்ள ஐக்கியநாடுகளின் மனிதஉரிமைப் பொதுப்பிரகடனத்தால் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ள அடிப்படைச் சுதந்திரங்களில் ஒன்றையே கல்விமந்திரி பகிரங்கமாகத் திரும்பஎடுத்துக்கூறியிருக்கின்றார். அவர் இந்தஉரிமையை நீதியானமுறையில் நிலைநாட்டுவாரானல் உதவிபெறும்பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கப்போவதையிட்டு ஆட்சேபனைசெய்கிறவர்களும் நீதியானமுறையில்தான் நடந்துகொள்ளுகிறார்களென்பது தெளிவாகும். அரசாங்கம் பாடசாலைகளைஎடுத்துநடத்துவதால் கல்வியின்தரம் குன்றும். அரசாங்க பாடசாலைகளில் சமயகல்வியைக் கட்டாயபாடமாக்கியபோதிலும் அதற்குப் பங்கம்உண்டாகும். அதனல் ஆங்காங்கு பிறந்துகொண்டிருக்கும் கேள்விக்கிசைந்து உதவிபெறும்பாடசாலைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமுன் பலவேறுசாகிய, சமய, கல்விநிபுணர்களைக்கொண்ட ஒருகம்மிஷனை நியமித்து, அதுபற்றி ஆராய்வதே அரசாங்கம் நடந்துகொள்ளவேண்டிய முறையாகும். இதற்கு நேர்மாறாக நடக்குமானல் ஆழமறியாமல் காலைவைத்தவனைப் போலவே அதன் பாடு முடியுமென்க.

# சுதேச வர்த்தமானம்

### பாடசாலைகளில்சேரும் பிள்ளைகளின் வயது

அடுத்துநிகழும் 1961-ம்ஆண்டு தைமாதம் 1-ந் திகதியிலிருந்து பாடசாலைகளில் சேரும் பிள்ளைகளின் வயது ஆறாக இருக்கவேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. தற்போது பிள்ளைகள் நாலரைவயதிலே பாடசாலைகளில் சேரலாம். இந்த நாலரைவயது இனிமேல் ஆறுவயதாக உயர்த்தப்படவிருக்கிறது.

### விலைப்படாதிருக்கும் சாரங்கள்

இலங்கையிலே உற்பத்திசெய்யப்பட்ட பெருவாரியான சாரங்கள் விலைப்படாது தேங்கிக்கிடக்கின்றன. 1958-ம்ஆண்டு புரட்டாசி 30-ந்திகதியன்று 17லட்சத்து 51ஆயிரத்து 339 சாரங்கள் விலைப்படாது கையிருப்பாயிருந்தன. சென்ற 1959-ம்ஆண்டு புரட்டாசி30திகதியன்று இந்தக்கையிருப்பு 24லட்சத்து 34ஆயிரத்து 695 சாரங்களாக அதிகரித்தது. அதனல், விலையைக்குறைத்தாவது இருப்பிலுள்ள இந்தச்சாரங்களை விற்றுதொலைக்க உடனேநடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பாராளுமன்றப் பொதுக்கணக்குக் கம்மிற்றி அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

### டக்றரின் பரிதாபமரணம்

யாழ்ப்பாணச் சுகாதாரவைத்திய அதிகாரியான டக்றர் வி.இராஜலிங்கம் அவர்கள் மின்சாரத்தினல்தாக்குண்டு சென்றசனிக்கிழமைமாலை மரணமாயினர். அன்றுதினம்அவர் தமதுமனையிலே குளிர்சாதனப்பெட்டியை (றெபிறிஜெறேற்றர்) திறந்தபோது மின்சாரத்தால் தாக்குண்டார். டக்றர்மார் உடனே விரைந்துசென்று வேண்டிய சிகிச்சைகள்செய்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றபோது அவர்மரணமாயினர். மரிக்கும்போது இவருக்கு வயது 42.

### வெளிநாட்டு ஆஸ்தியின்வீழ்ச்சி

இலங்கையின் வெளிநாட்டு ஆஸ்தி இவ்வருடத்திலே தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துவருவதாக மத்திய வங்கிமூலம் தெரியவருகிறது. இவ்வருடம் தைமாதம்முதல் ஆடிமாதம்வரை எடுக்கப்பட்டுள்ள கணக்கிலிருந்து இலங்கையின் வெளிநாட்டுஆஸ்தியிலே சுமார் 2கோடிரூபா வீழ்ச்சியடைந்திருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. இந்தவீழ்ச்சி சென்றவருடத்தைக் காட்டிலும் 3கோடிரூபாவால் அதிகரித்துள்ளது.

### வரவுசெலவுத் திட்டம்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தின் முதலாவது வரவுசெலவுத்திட்டம் சென்றசெவ்வாய்க்கிழமை சனப்பிரதிநிதிகள்சபையிலே நிதிமந்திரியால் சமர்ப்பிக்கப்படலாயிற்று. ஐப்பசி மாதம் 4-ந்திகதிமுதல் 13-ந்திகதிவரை இதுபற்றியவிவாதம் சபையில்நடைபெறும். பின்னர் கம்மிற்றிநிலைமையில் இதுபற்றியவிவாதம் கார்த்திகைமாதம் 2-ந்திகதியன்று ஆரம்பமாகும்.

### பாப்பரசர் நியமனஞ் செய்துள்ள இலங்கைக் குருப்பிரசாதி

திருச்சபைப் பொதுச் சங்கத்திற்குச் செய்யப்படும் ஆயத்தமாய்ச் சாதாரணகத்தோலிக்கரின் அப்போஸ்தலத்துவத்திற்கான பாப்பரசரது கம்மிஷனின் ஆலோசகர்களில் ஒருவராய் அதிவண. பீற்றர் ஏ. பிள்ளை சுவாமியவர்கள் பரிசுத்த பாப்பரசராலே நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். இந்த நியமனம் நிகழும் புரட்டாசி மாதம் 1-ந் திகதி வியாழக்கிழமையன்று வத்திக்கானிலே அதிகாரபூர்வமாக வெளியிடப்படலாயிற்று.

### வரிகள் அதிகரிக்குமா?

புதிய வரவு–செலவுத்திட்டத்திலே அத்தியாவசிய தேவைப்பொருட்கள் தவிர்ந்த ஏனையபொருட்களுக்கு வரிகள் அதிகரிக்கக்கூடுமென்று அரசியல் வட்டாரங்களைச்சேர்ந்தோர் எதிர்பார்க்கின்றனர். புடவைகளின்வரிகள் — முக்கியமாகப் பட்டுச்சேலைகள், கம்பளங்கள் ஆதியவற்றின்வரிகள் அதிகரிக்குமென்ற எண்ணத்தாலே கொழும்பிலே—விசேஷமாகப்புறக்கோட்டையிலுள்ள கடைகளைப் புதுவருடப்பிறப்பு, கிறிஸ்மஸ்பண்டிகை காலங்களில் போன்று பெண்கள்சிலதினங்களாக முற்றுகையிட்டு அவைகளைவாங்கத் தொடங்கியிருக்கிறார்கள். சிலகடைகளிலே பட்டுச்சேலைகள் முற்றாகவே விற்பனவாகிவிட்டனவாம்.

### வெளிநாடு செல்லுகிறவர்களின் அரிசிக்கூப்பன் புத்தகங்கள்

நிகழும்புரட்டாசிமாதம் 30-ந்திகதிக்குப்பின் இலங்கையைவிட்டு வெளிநாடு செல்லும்எவராவது தனதுஅரிசிக்கூப்பன் புத்தகத்தை அரசாங்கத்தினிடம் ஒப்படைக்கவேண்டும். அரிசிக்கூப்பன் புத்தகம் இல்லாதவர் அது இல்லையென்பதற்கு அத்தாட்சிப்பத்திரம் காண்பிக்கவேண்டும். அன்றேல்எவருக்கும் றெயில், கப்பல், விமானப்பிரயாணசீட்டுக்கள் வழங்கப்படமாட்டாது. வெளிநாடுசென்றவர்களின் அரிசிக்கூப்பன் புத்தகங்களை இங்குள்ளவர்கள் பிரயோகிப்பதால் அதைத்தடுக்கும்நோக்கமாகவே இந்தநடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

### பெரியரூபா நோட்டுகள்

பெரியரூபாநோட்டுகளாகிய 50ரூபா 100ரூபா நோட்டுகளை மாற்றுவதிலே சென்றவாரம் நாடுமுழுவதும் பரபரப்புக் காணப்படலாயிற்று. இந்த நோட்டுகளைச் சேமித்து வைத்திருந்தவர்கள் 5ரூபா, 10ரூபாநோட்டுகளாக அவைகளை மாற்றிக்கொள்ளுமாறு வங்கிகளை முற்றுகையிட்டார்கள். அதனல் வங்கிகளிலே தினமும் ஐந்துலட்சம்ரூபா பெறுமதியான பெரிய நோட்டுகள் சிறியநோட்டுகளாக மாற்றப்படலாயின. பெரியநோட்டுகளைச் செலவாணியிலிருந்து நீக்கிவிட அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதென்று பரந்த வதந்தியே இதற்குக் காரணமெனத் தெரியவருகிறது.

---

### பன்னிரு சனிக்கிழமைகள்

மார்கழிமாதம் 8–ந்திகதி அமலோற்பவமாதா திருநாளுக்கு முன்வருகிற 12 சனிக்கிழமைகள்:– ஒவ்வொரு சனிக்கிழமைக்கும் ஒருபரிபூரண பலன். இந்தப்பலன்களை அடைவதற்குக் கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டும்.

இப்பலனைஅடைய நிபந்தனைகள்:

i. பாவசங்கீர்த்தனம் செய்தல்.
ii. திவ்வியநற்கருணை உட்கொள்ளுதல்.
iii. மாதாவின் அமலோற்பவத்திற்குச்செய்யப்படும்நிந்தைஅவமானங்களுக்குப் பரிகாரமாகச் சில செபங்கள் அல்லது தியானம் செய்தல்.
iv. பாப்பானவரின் கருத்துகளுக்காக வேண்டிக்கொள்ளுதல்.

(மேற்சொன்ன 12 சனிக்கிழமைகள் புரட்டாசிமாதம் 17–ந்திகதி ஆரம்பமாகும்,)

(அர்ச். 10-ம்பத்திநாதர் 1908–ம் ஆண்டு கார்த்திகைமாதம் 26–ந் திகதி.)

> **"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## சதாசகாயமாதா கோணம்

—:—

### முதுபெரும் பாவி

ஆஸ்திரேலியாவின் பட்டினம் ஒன்றிலே சில வருடங்களின்முன் நான் ஒருஞானவொடுக்கம் போதிக்கச்சென்றிருந்தேன். அந்தமீசாமின் கட்டளைக்குருவானவரோடு ஒருநாள் பின்னேரம் உலாத்துக்கு வெளிகொண்டிருந்தேன். அந்தக்குருவானவர் வயது குறைந்தவராயினும் ஆத்துமதாகம் அதிகம்உடையவர். இருமருங்கும் நிழல்தரும்மரங்கள் நிறையவுள்ள வீதியூடே நாம் உலாவிக்கொண்டிருந்த போது ஒருஅதிசயகாட்சி என்கவனத்தைக் கவர்ந்தது. நாம் நடந்துசென்ற பாதையின்ஓரத்திலே ஒருகெபியருகில் ஒருமுனிபுங்கவர்போன்று தோற்றமளித்த ஒருவயோதிபர் நின்றார். அவருக்குவயது 90மட்டில் இருக்கும். என்றாலும், அவர் கம்புகணக்கு நிமிர்ந்துநின்றார். அவரின்நீண்டதாடி பனிக்கட்டியையும் தோற்கடிக்கும் வெண்மையாகவிருந்தது.

என்னுடன் வந்த குருவானவரை நான்விழித்து "அந்தவயோதிபர் யார்?" என்று வினவினேன்.

"ஓ! அதுதான் இவ்வூரின் முதுபெரும்பாவி" எனக்கூறி மூகத்தைச் சுழித்தார் குருவானவர்.

"முதுபெரும் பாவியா?" என்று அதிசயத்துடன் கேட்டேன்.

"ஆம், இந்தமீசாமில் உள்ளகிறிஸ்தவர்கள் எல்லோரும் அப்பெயர் கொண்டுதான் அவரை அழைக்கிறார்கள். அவர் ஒருபிரான்ஸியவாசி. இங்குவந்து ஏறக்குறைய 60வருடங்கள் ஆகின்றன. அந்தக்கெபியை அவரே கட்டி இங்குவந்த காலந்தொட்டு ஓர் தவசிபோலச் சீவிக்கின்றார். தன் நேரம்முழுவதையும் தோட்டஞ்செய்வதிலேயே செலவழிக்கிறார். தனக்குத்தேவையான சாப்பாட்டுச்சாமான்களை வாங்க ஒவ்வொருநாட்காலையும் சந்தைக்குச் செல்வதல்லாது வேறு எங்கும் அவர்செல்வதே கிடையாது" என்று சொன்னார் குருவானவர்.

"அவர் ஒருகத்தோலிக்கரா?" என்றுகேட்டேன்.

"அவர் ஞானஸ்நானம் பெற்றவர்தான். ஆனால், இங்குவந்த நாட்தொடக்கம் அவர்கோவில்முகம் கண்டறியார். இயற்கை அழகை வணங்குவதுதான் அவரின்சமயம்போலத் தோற்றுகின்றது. அவருக்கு வயலெற் புஷ்பங்கள்மீது விசேஷபிரீதியுண்டு" என்று பதில்கொடுத்தார் குருவானவர்.

"அவரை நீர் வளைத்துப்பார்க்கத் தெண்டிக்கவில்லையா?" என்றுகேட்டேன்.

"ஒருமுறை தெண்டித்தேன். தேவநேசத்தைப்பற்றியும் என்னால்கூடிய மட்டும் உபதேசித்தேன், மரணத்தைப்பற்றியும், தீர்வையைப்பற்றியும், நரகத்தைப்பற்றியும் ஓதவேண்டியதெல்லாம் ஓதினேன். ஒருவித பிரயோசனமும் இல்லை. நான்சொன்னவற்றைக் கேட்காதது ஒருபுறமிருக்க, அவமரியாதையாக, மானக்கேடாக என்னை நிந்தித்துப்பேசவும் அவர்சற்றேனுந் தயங்கவில்லை" என்றார் குருவானவர்.

"அன்பின்வழியை நீர் ஏன்கையாடவில்லை?" என்று கேட்டேன்.

"இப்பேர்ப்பட்ட பழையபாவியோடும் அன்புபாராட்டுவதா? அதனால் ஒருவிதபயனும் கிடையாது. அதில் எனக்கு நம்பிக்கையில்லை என்பதே எனது அபிப்பிராயம்" என்றார் வாலிபகுரவர்.

"என் அன்பரே! அன்பின்வழியில் உமக்கு நம்பிக்கையில்லை என்கிறீரே. பொதுவாகப் பழையபாவிகள் கண்டனத்தை ஏற்றுக்கொள்வதில்லை. ஒருவன் பெரியபாவியாய் இருந்தால் அவன்மட்டில் அன்பும், தயையும்காட்டவேண்டியது அத்தியாவசியம். எங்கள்கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துநாதரிலும் பார்க்கப் பாவிகள்பேரில் அதிக அன்புகாட்டிய வேறெவரும்இருக்கிறார்களா? சொல்லும் பார்ப்போம். நரகத்தைப்பற்றிப் பயங்கரந்தரவல்ல எத்தனையோ பிரசங்கங்களிலும்பார்க்கத் தேவஇரக்கத்தைப்பற்றிய பிரசங்கங்கள் எத்தனையோபாவிகளை அதிகமாக மனந்திருப்பியுள்ளன என்னும் உண்மையை என்னிடமிருந்து கற்றுக்கொள்ளும். எனது பலவருட அநுபவத்தையொட்டியே இதைச்சொல்லுகிறேன். அந்தவயோதிபரை நாளைக்கு நாம் சந்தித்துப் பேசவேண்டும்" என்று கூறிமுடித்தேன்.

அடுத்தநாள் சதாசகாயமாதாவின் மகிமைக்காகத் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுத்தேன். பூசைவேளையில் அந்த "முதுபெரும் பாவியின்" இருதயத்தை இளகச்செய்ய எனக்குத் தேவையான வரப்பிரசாதத்தைத் தந்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்தேன். அன்றுசாயந்தரம் அவ்வயோதிபரைச் சந்திக்கப்புறப்பட்டேன். நான் வயோதிபரின்இடத்தைச் சேர்ந்தபோது அவர் தனது பூக்கன்றுகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தார். நான் அவரது தோட்டப்படலையடியில் நின்று அவரையே உற்று நோக்கிக்கொண்டிருந்தேன். அவரின் முதுகுப்புறம் என்பக்கமாக விருந்தது. சிலநிமிஷங்களின்பின் அவர்திரும்பிய போது என்னைக்கண்டுவிட்டார், ஏதோ தேள் கொட்டியதுபோலத் திடுக்கிட்டார். கண்கள்சிவந்தன. உதடுகள் துடித்தன.

"இவ்வளவு கூறுகுறிப்பாக யாரைப்பார்க்கிறீர்" என்று தடித்த குரலில் கேட்டார்."

"உம்மைத்தான் பார்க்கிறேன்" என்று சாந்தமாகப் பதில்கொடுத்தேன்.

"உம்முடையவேலையை நீர்போய்ப் பாரும். இந்தஇடத்தில் குருமார் நின்று தூங்குவதை நான்விரும்புவதில்லை. விளங்குந்தானே" என்றார் வயோதிபர்.

"கோபிக்காதீர்கள். குருமாரைக் காண உங்களுக்கு விருப்பமில்லாதிருக்கலாம். ஆனால், உம்மைப்போன்ற மனிதரைக்காண எனக்கு மிகுந்தஆசையாயிருக்கிறது" என்றேன்.

"நான்என்ன அவ்வளவு நூதனசிருட்டியா? இந்தவிதமாக நின்று என்னை ஏறெடுத்துப்பார்க்க. என்னில் என்னவிசேஷத்தைக் கண்டுவிட்டீர்?" என்றுகேட்டார் வயோதிபர்.

"பெரியவரே! உமதுதாடியின் விசேஷத்தைத்தான். நான் பலதேசங்களில் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறேன். நான் எத்தனையோ தாடிகளைப் பார்த்திருக்கிறேன். ஆனால், உம்முடைய தாடியைப்போல அழகானதொன்றை நான் இதுவரை கண்டதேயில்லை.

(தொடரும்)

● தன்னையே அதிகாரியாய்த் தெரிந்துகொள்பவன், தன்னை ஓர் பைத்தியகாரனின் கண்காணிப்பில் வைக்கிறான்.

—அர்ச். பேர்னாட்

# அங்கும் இங்கும்

### கொள்கையை மாற்றியேதீரும்

"உதவிபெறும் சமயஸ்தாபன பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதை எதிர்த்துப் பாராளுமன்றத்திற்குள்ளே தமிழரசுக்கட்சி எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது. இனிமேல் அது வெளியே மக்கள்இயக்கமாகமாறி நடவடிக்கைகள் எடுக்குமானால் அரசாங்கம் தலைகுனிந்து தனதுகொள்கையை மாற்றியேதீரும். எனது தொகுதியிலுள்ள அரசாங்கபாடசாலைகளின் கட்டடங்களுக்குக் கூரையில்லை. மாணவர்களுக்கு ஆசனங்களில்லை. ஆசிரியர்கள் போதியளவு வேலைபார்க்கவில்லை. இந்தநிலையில் இப்போதுள்ள பாடசாலைகளையே நடாத்தமுடியாத அரசாங்கம் சமயஸ்தாபன பாடசாலைகளைப்பொறுப்பேற்று எங்ஙனம் நிர்வகிக்கப் போகின்றது?

திரு. ரி. ஏகாம்பரம்
மூதூர்த்தொகுதி, முதலாவது எம். பி.

### சர்வாதிகாரத்தின் சின்னங்கள்

"சென்றதேர்தலின்பொழுது சமயஸ்தாபன பாடசாலைகளை அரசாங்கம் எடுத்து நடத்துவதைத் தமிழரசுக்கட்சி எதிர்க்குமென்று உறுதியளித்தது. அதன்படி நாம் இதனைஎதிர்த்துப் பாராளுமன்றத்திலே திருத்தப் பிரேரணை கொண்டுவந்தோம். பேச்சுச் சுதந்திரத்தைப் பறித்தலும், மாணவர் சிந்தனையை ஒடுக்கலும் சர்வாதிகாரத்தின் சின்னங்களாகும். ஜனநாயக நாட்டில் இவற்றிற்கு இடங்கொடுத்தலாகாது. சமயஸ்தாபனங்கள் ஆற்றியுள்ளபணிகளை நாம் மறத்தலாகாது."

திரு. என். ஈ. இராசவரோதயம்,
திருகோணமலை எம். பி.

### சலுகைகள் அல்ல உரிமைகள்

"அற்பசலுகைகளைக்கண்டு நாம் அயர்ந்துவிடக்கூடாது. நமக்குவேண்டியது சலுகைகள்அல்ல, உரிமைகள் தான் என்பதைத் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்ட நாம்என்றும் தயாராயிருக்கவேண்டும். ஏனையசமூகத்தவர்களுடன் தமிழ்மக்களும் இந்நாட்டில் சமவுரிமையோடுவாழ வழிவகுக்க வேண்டியது நமதுகடமையாகும். தமிழினம் இந்நாட்டில் சுயமரியாதையோடு ஏனையஇனத்தவர்களுடன் தலைநிமிர்ந்து வாழவேண்டும்என்பதே எனதுஅவாவாகும். அந்தஇலட்சியத்திற்காக என்னால்இயன்றவரை உழைப்பேனென உறுதிகூறுகின்றேன்."

திரு. வி. ஏ. கந்தையா,
தீவுப்பகுதி எம். பி.

### இயங்கிவரும் இரகசியஇயக்கம்

"சமயசெல்வாக்கை அடியோடு ஒழிப்பதற்கும், இலங்கையிலுள்ள பல்வேறுசமயத்தினரிடையே கலவரத்தை உண்டுபண்ணவும் இரகசியஇயக்கம்ஒன்று இயங்கிவருகிறதையிட்டு நான்மக்களை எச்சரிக்கிறேன். மற்றவர்களின்மதத்திற்கும் மதிப்பளித்து ஒற்றுமையாகஇருக்குமாறு மக்களுக்கு நான் ஆலோசனைகூறுகிறேன்."

திரு. டபிள்யு. தஹநாயகா,
முன்னாள் கல்விமந்திரி.

### கோடரிவைக்கின்றது

"எதிர்காலம் இருள்நிறைந்தகாலம். அரசாங்கம் உதவிபெறும்பாடசாலைகளை எடுப்பதுடன் எமதுபிள்ளைகளின் வருங்காலநிலையைப்பற்றி நாம்மிகவும் மனவருத்தப்பட வேண்டியிருக்கிறது. நாம்பெற்ற உண்மையான கத்தோலிக்க சமயகல்வியை நமதுபிள்ளைகளுக்குக் கொடுக்கும்சுதந்திரத்திற்கு அரசாங்கம் கோடரிவைக்கின்றது. ஆகையால், பலகஷ்டங்களுக்குள்ளாகித்தான் எமதுசமயத்தை நாம் காப்பாற்ற வேண்டும்."

திரு. வீ. ஏ. அழகக்கோன்,
மன்னார் எம். பி.

### பஸ்களைப்போல் பாடசாலைகள்

"எந்தவிதமானதாமும், வித்தியாசமுமின்றி உதவிபெறும பாடசாலைகளையெல்லாம் அரசாங்கம் கைப்பற்றும். இலங்கையிலுள்ள எல்லாப்பஸ்களையும் ஒரேநாளில் அரசாங்கம் எடுத்தது போன்று எல்லாஉதவிபெறும் பாடசாலைகளையும் அரசாங்கம் ஒரேநாளில் எடுக்கும். என்னைப் பயமுறுத்துகிறார்கள். ஆனால்,நான் அதைப்பற்றிக் கொஞ்சமும் பயப்படவுமில்லை. அக்கறை எடுக்கவுமில்லை. நான் ஓர் எலியைப்போல் மரணமடைவதைவிட நாட்டிற்குச்சேவைசெய்து ஒருதேசிய வீரன் என்றமுறையில் மரணமடைய விரும்புகிறேன்."

டக்றர் பதியுதீன் மஹமூத்,
கல்விமந்திரி.

### அரசாங்கம் முற்படவில்லை

"அரசாங்கம் பொறுப்பேற்று நடத்தும் பாடசாலைகள் சீர்கேடானநிலையில் இருக்கின்றன. அவற்றிலே கல்வித்தரம் குன்றியிருக்கிறது. இவ்வேளையில் இலங்கையின்கல்வித்தரத்தை உயர்த்த அரசாங்கம்முற்படவில்லை. சூழ்ச்சியினுள் செயலாற்ற முற்படுகின்றது. புத்தகம்மிஷனது சிபாரிசின்கீழ் செயலாற்றமுனைந்திருக்கும் அரசினர் உதவிபெறும்பாடசாலைகளை எடுப்பதானது, நன்குஅத்திபாரமிடப்பட்ட அயலானதுவீட்டின் அத்திபாரத்தில் கைவைப்பதைப்போன்றது. பழிவாங்கும் இந்நிலையைத்தான சீர்திருத்தம் என்பது."

திரு. எஸ். இராசதுரை,
மட்டக்களப்பு எம். பி.

### கத்தோலிக்கரும் பாடசாலைகளும்

"பிள்ளைகளைப்படிக்கவைக்க வேண்டுமென்று அரசாங்கம்கேட்கலாம். ஆனால், பிள்ளைகள் எவ்வாறுபடிக்க வேண்டும்? எதைப் படிக்கவேண்டும் என்பது பெற்றோரின் உரிமையாகும். இதைஅரசாங்கம மறந்துவிடப்படாது. கத்தோலிக்கருக்கு அவர்களின் சமய பாடசாலைகள் சமயத்தைஒத்தவைகள். ஞாயிற்றுக்கிழமை கோவிலுக்குப்போவது எத்துணை அவசியமோ அவ்விதமே அவர்களின் சமயஸ்தாபன பாடசாலைகளிலும் கத்தோலிக்க பிள்ளைகள்படிப்பது அவசியமாகும்."

செனற்றர் எட்மன்ட் கூறே.

### ஒற்றுமையில்தான் தங்கியுள்ளது

"சிம்மாசனப்பிரசங்கத்தின் தமிழ் மொழிபெயர்ப்பை வாசித்ததினால் சிறுபான்மையினரின் அபிமானத்தையும், நல்லெண்ணத்தையும் இந்தஅரசாங்கம் பெற்றிருக்கின்றது. ஒருநாட்டின் வளர்ச்சி அந்நாட்டிலுள்ள மக்களிடையே நிலவும்ஒன்றுமையில்தான் தங்கியிருக்கிறது. அந்தஒற்றுமைக்கு இந்த அரசாங்கம் பாதைவகுத்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்."

செனற்றர்சந்திரா குணசேகரா.

### சிரேஷ்டதாயாரின் விஜயம்

அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் அதிசிரேஷ்டரான அதிசங். எம். தியோடோசியா தாயார் அவர்கள் இலங்கையிலே தொண்டாற்றி வருகின்ற தமது சபைக் கன்னியாஸ்திரிகளைத் தரிசிப்பதற்கெனச் சென்ற புதன்கிழமை கொழும்புவந்து சேர்ந்திருக்கின்றார்.

"சந்ததிவிருத்தியைத் தேவையான அளவுக்குக் கட்டுப்படுத்திக்கொள்ளச் சுயகட்டுப்பாடுஒன்றுதான் நிச்சயமானமார்க்கம். கர்ப்பத்தடைக் கருவிகளைப் பயன்படுத்தினால். அது மனிதகுணத்தின் தற்கொலையாகும்."

— காந்தியடிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

# இளைஞனின் இலிகிதம்

ஒளிஇல்லம்,
ஒளியூர், (P. O.)

**அன்பின் நண்ப!**

கண்டு கனநாள். கதைத்து வெகு நாள் கடிதமூலம். என் சிந்தையைக் கிளறிவிட்டது நீ கடாவிவிட்டேகிய வினு. "யாதும் கறைகள் படிந்திருக்கின்றனவா நம் சமூகத்தே" எனும் நின்வினுவிற்கு என் சிந்தைக்கெட்டியதை வடித்தளிக்கிறேன் எழுத்து வடிவில். இயலுமேல் அளித்துப் பார் பருகுவதற்கு.

நம் இருபதாம் சகாப்தம் நாகரீக உச்சிக்கே தாவி, ஆங்கு தன் கொடியைப் பறக்கவிட்டு வெற்றிப்புன்னகை புரிகிறது விஞ்ஞான விந்தையால். இந்நாளில் நம் இளவல்கள் சருவேசுரனுடைய நாலாங் கற்பனையைச் சரிவர அனுசரிப்பதாகத் தெரியவில்லை நாகரீக மோகத்தால். இதையே பறைசாற்றுகின்றன இன்றைய சிறுகதைச் சிருட்டிகர்களால் சிதறப்படும் சிறுகதைகளும், பாவலர்களால் பாடப்படும் பாக்களும், கவிஞர்களால் புனையப்படும் கவிதைகளும், நாவலர்களால் நாட்டப்படும் நாவன்மையும், எழுத்தாளர்களால் எழுதப்படும் எழுத்தோவியங்களும், சிந்தனைச்சிற்பிகளால் சிந்தப்படும் சிரியகருத்துக்களும், அறிஞர்களால் அளிக்கப்படும் அறிவுரைகளும், கலைஞர்களால் கடாவப்படும் கருத்துக்களும், பெரியோர்களால் பேசப்படும் பொன்மொழிகளும், பேச்சாளர்களால் பேசப்படும் பேச்சுக்களும்.

ஒரு பதவி வகிக்கும் நம் இளவல், தன் முதிய, வறிய, அறியாமை நிரம்பிய தன் தந்தையை, தன் இள நண்பனுக்கு அடுத்தவீட்டுநபர் என அறிமுகப்படுத்தினுராம் அறிவொளி வீசும் ஆங்கிலத்தில். எப்படியிருக்கிறது விநோதமான விந்தை. "பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு" என்ற நம் மூதாதையரின் பொன்வாக்கைப் போற்றவேண்டும் நாம். தன் மகன் பெரிய நகரத்தில் நன்ருக இருக்கிருனு...? எனப் பார்க்க விரும்பிவந்த தந்தையை அறிமுகப்படுத்திய வள்ளலைத்தான் பாருங்களேன். "அன்னையும், பிதாவும் முன்னறிதெய்வம், தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை, தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்றெல்லாம் கடாவிவிட்டேகினர் காலன்வாயில் நம்முன்னவர்கள். அவர்களது வழித்தோன்றல்கள் என வாயளவில் விண்ணுணம்பேசும் நாம் நடப்பது எப்படி வாழ்வில். சற்றே சிந்தியுங்கள்.

பிரதிபலன் கருதாது நம்மைப் பெற்று, வளர்த்து, கல்விகற்கச் செய்து, பதவிவகிக்கவைத்த நம் பெற்ருேரை நம் பெற்ருேர் எனக் கூறுவதற்கு என்ன வெட்கம். இன்று நாம் இப்படி என்ருல், நாளை நாத்திகர்முன் என் தந்தை கிறீஸ்து அல்ல; நான் கிறீஸ்தவன்—கத்தோலிக்கன் அல்ல; எனப் பிதற்ருதிருப்போம் என்பதற்கு என்ன உத்தரவாதம். நமது பெற்ருேரது வறுமை, அறியாமை, முதுமை முதலியவற்றின் நிமித்தம் வெட்கப்படக்கூடாது எனப் படிப்பிக்கிருர் பரமன். நாம் அவர்களது அறியாமையை அகற்றி அகல்விளக்கேற்ற வேண்டும் அவர்களது அகத்தே; வறுமையைக் களைய வேண்டும்; அந்திய வேளையில் அவர்களது ஆத்தும சரீர நன்மைகளைக் குறையறச் செய்வதில் கண்ணுங் கருத்துமாய் இருக்க வேண்டும். நாம் நமது கடமையில் தூங்காதிருந்தால் எல்லாம் சரி. மனிதன் சரி என்ருல் உலகம் சரி தானே?... நீளும் இலிகிதத்தை முடிக்கிறேன் இத்துடன்.

இங்ஙனம்,
அன்பு நண்பன்,
"நல்வழியான்"

## உங்களுக்குத் தெரியுமா ?

✻ பழைய ஜெருசலேம் நகருள் பிரவேசிக்க எட்டுவெளிவாயில்கதவுகள் இருக்கின்றன; இவற்றில் ஏழுமாத்திரமே பாவனையிலுள்ளன என்பது ...

இந்த வெளிவாயில் கதவுகளுள் ஒன்றினூடாகவே அன்று திவ்வியயேசு ஓசன்ன வாழ்த்துகளின் மத்தியிலே ஒட்டோலகமாய் ஜெருசலேம்நகருக்கு எழுந்தருளினுர். அதன்மேல் ஐந்து தினங்களின்பின் அந்த வெளிவாயில் கதவுகளில் ஒன்றினூடாகவே சிலுவை சுமந்துகொண்டு எபிரேய பாஷையில் கொல்கொத்தா என அறியப்படுகின்ற கல்வாரிமலையைநோக்கிச் சென்ருர்.

✻ ஒருசாண் $10\frac{1}{8}$ அங்குலம் என்பதும், ஒரு சதுரமைல் 640 ஏக்கர் கொண்டது என்பதும், 1829-ம் ஆண்டு முதன்முதலாகச் செய்யப்பட்ட தீக்குச்சுப்பெட்டியின் நாமம் 'லூஸிபேர்' என்பதும், ஒருமனிதனின் சுவாசப்பைகள் 200 கனஅங்குல வாயுவைக் கொள்ளக்கூடியன என்பதும், சில பந்தையக் குதிரைகள் ஒரு பாய்ச்சலில் 24 அடி தாண்டிச்செல்லக் கூடியன என்பதும் ... ...

✻ அயர் என்று அறியப்படுகின்ற கத்தோலிக்க அயர்லாந்தின் தலைப்பட்டணமாகிய டபிளின்நகரின் லோட்மேயராகத் தெரியப்பெற்றிருப்பவர் திரு. மோறிஸ் டொக்றெல் என்ற புறொட்டஸ்தாந்த பிரமுகரே என்பது ... ...

இவர் அந்நாட்டின் அரசாங்கசபையில் ஒரு அங்கத்தவர். அந்நகரின் வர்த்தக–அரசியல் துறைகளில் அநேக வருடகாலம் பிரஸ்தாபமுற்று விளங்குகிருர். இற்றைக்குச் சிலவருடங்களின் முன் அந்நகரின் லோட்மேயராகத் திரு. றெபேட் பிறிஸ்கோஎன்ற யூதப் பிரமுகர் இருந்துவந்தார். ஆனுல், ஒரு புறொட்டஸ்தாந்தர் அந்நகரின் லோட்மேயராக இருந்தது இற்றைக்கு 60 வருடங்களின் முன்னராகும்.

✻ கடைசியாகப் பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தாணுபதித்துவம் நிறுவப்பெற்ற ஸ்தானம் தென்மார்க்கின் தலைப்பட்டணமாகிய கோப்பென்ஹாகன் நகரமே என்பது ... ...

இது ஸ்காண்டிநேவிய அப்போஸ்தலிக்க ஸ்தா[illegible] நாமத்துடன் சென்ற பங்குமாதம் நிறுவப்படலாயிற்று. இதன்கீழ் தென்மார்க்கும், அதன் குடியேற்ற தீவுகளான கிறீன்லாந்து, பின்லகந்து, ஐஸ்லாந்து என்பனவும், நோர்வேயும், சுவீடனும் அடங்கியுள்ளன. இந்த நாடுகளில் வசிக்கின்ற இரண்டுகோடி மக்களில் [illegible] 62,739 பேரே.

## சுவிசேஷ சிந்தனை

"எவனும் இரண்டு எசமான்களுக்கு ஊழியஞ்செய்ய முடியாது"
(மத்தேயு 6 : 24—33).

ஆண்டவரும் இரட்சகருமாகிய யேசுநாதர் நாம் பிதாவை நேசிக்க வேண்டுமாயின் அவரின் சித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்று பல தடவைகளில் திருவாய் மலர்ந்தார். நமது பரலோக எசமானுகிய தேவனுக்கும், திரவியத்துக்கும் நாம் ஊழியஞ் செய்ய முடியாதென்பதைத் திட்டவட்டமாகத் தெளிவுறுத்தினுர். எவனும் இரண்டு எசமான்களுக்கு ஊழியஞ்செய்ய முடியாது. ஏனெனில், ஒருவனைப் பகைத்து மற்றவனை நேசிப்பான். அல்லது, ஒருவனைச் சார்ந்து மற்றவனை நிந்திப்பான். ஆகையால், நாங்கள் பரலோகத்திற்கும், திரவியத்திற்கும் பணிவிடை செய்ய முடியாது. திரவியத்துக்குப் பணிவிடை செய்தால், பரலோக பிதாவாகிய தேவனை நிந்திக்க வேண்டும். தேவனை நேசித்தால் திரவியத்தை நிந்திக்க வேண்டும்.

இதனுல் நாங்கள் எங்கள் சீவியத்திற்கு என்ன செய்வோம் என்று கவலைப்படவேண்டியதில்லை. உணவோ, உடையோ, இல்விடமோ எல்லாம் நம்மைப் படைத்த பரமபிதாவினுல் அருளப்படும். நாம் உண்டாக்கப்பட்ட எல்லாச் சிருட்டிகளிலும் மேலானுேர். ஆகையால், நாம் ஏன் திரவியத்தின்மேல் ஆசைப்படவேண்டும்? வனத்துப்பறவைகளைப் பாருங்கள். காட்டு மிருகங்களைப் பாருங்கள். புல்பூண்டுகளைப் பாருங்கள், இவையெல்லாவற்றையும் படைத்தவர் பராமரித்து வருகிருர்.

படைத்தவன் படியளப்பது கடமையல்லவா? அதனுல் நீயேன் கவலைப்படுகிருய்? இதனுல் நாம் அவரின் அருள் போதகத்தின்படி நடப்போமாக. அவரே திருமுகமலர்ந்து திருவாய் மொழிந்ததாவது: "எல்லாத்துக்கு முன், சருவேசுரனுடைய இராச்சியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது உங்களுக்குச் சகலமும் கொடுக்கப்படும்." இதை எம் வாழ்வில் கடைப்பிடிப்போமாக.

# எழைக்கு வாழ்வளித்த எமில்

விண்ணெல்லாம் தன்னெளிவீசிய கதிரவன் களைப்பினுல் உறங்கிக் கொண்டிருக்கும்சமயம் பட்சிஜாலங்களினதும், வனவிலங்குகளினதும் சப்தங்கள் அடங்கிப் பயங்கர அமைதி குடிகொண்டிருக்கும் வேளையில், கவர்விட்டுவளர்ந்து கண்ணுக்குத் தெரியாமல் காட்டுக்குள் மறைந்திருந்த புளியமரத்தில் தொங்கிய தூக்குக்கயிறென்றில் தூங்கத் துணிந்துகொண்டிருந்த துரையைத் துரத்திவந்த ஓர் உருவம் தூங்கவிடாமல் தடுத்து, "தம்பி யார்நீ? ஏன் தூங்கத்துணிந்தாய்?" என்றது.

"ஐயா! என்பெயர் துரை. உயர் குடும்பத்தில் பிறந்து உத்தமனுய்க் கத்தோலிக்க பாடசாலையொன்றில் கல்விபயின்றேன். ஆனுல், மேலும் படிக்கமுடியாதவனுக்கி விட்டது, பத்துமாதஞ் சுமந்து பெற்றுப் பாலூட்டித் தாலாட்டிவளர்த்த அன்னையின் அகாலமரணம். பாலியப்பருவத்திலே பெற்றதாயைப் பறிகொடுத்த பெரும்பாவியானேனே என்று விம்மிவிம்மி அழுதேன். புரண்டேன் அவ்வுயிரற்ற உடல்மேல். கழுவினேன் அதைக்கண்ணீரால். என் செய்வேன்.

*ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும்*
*மாண்டார்வருவரோ மாநிலத்து......*

"அன்னையின் உடலையும் அடக்கம் செய்து முடிந்தது. அத்துடனுவது எனதுகவலை ஒழிந்ததா? இல்லை. பெண்ணுசைப் பித்தரான என்தந்தை வேறொருத்தியை விவாகஞ்செய்தார். அவளோ என்னை அடித்தாள். அல்லோல கல்லோலப் படுத்தினுள். அன்புடன்யான் சித்தியென்ருல் கத்தியெடுப்பாள் அலங்காரத்துடன். சித்தியின்சிங்காரமொழியில் சிக்கி, சிந்திக்கத்தவறிய என்தந்தை மகனென்றும்பாராது என்னைத்துரத்தினுர் வீட்டைவிட்டு. கிடந்தேன் பட்டினி. அலைந்தேன் நாடுபூராகவும் உள்ளவீடுகளில் வேலைதேடி. படித்தது போதாதுஎன்ருர்கள் பணச்செருக்குப்படைத்த சிலபச்சோந்திகள். இறுதியில் இரும்புக்கடையொன்றில் இரக்கசிந்தைபடைத்த கனவான்ஒருவரால் வேலைக்கமர்த்தப்பட்டேன். ஒன்பதுமாதங்கள் ஒழுங்காக வேலைசெய்தேன். பத்தாம் மாதம் வந்ததுபேரிடி. இரும்புப்பொறி கண்ணில்தெறித்து ஒற்றைக்கண்ணையிழந்தேன். மறுகண்ணும்மதியத்தில்தான் தெரிந்தது. கண்கெட்டதை அறிந்தகனவான் வேலையினின்றும் என்னைநீக்கிவிட்டார். தெருத்தெருவாகப் பிச்சைக்கலைந்தேன். தண்டிச் சோறுதின்னும் தடிமாடென்றஏச்சும், காடையரின் கல்லெறியும்தான் எனக்குக்கிடைத்தது. இவற்றையும்பார்த்துச் சலியாது இருக்க நான்என்ன கடவுளா? பொறுக்கமுடியாத கவலையின்நிமித்தம் கயிற்றில்தூங்கத் துணிந்தேன்" என்று கம்மியகுரலில் விம்மிவிம்மி அத்தனையும் சுத்தமாய்ச் சொல்லி முடித்தபின், "தாங்கள்யார்? தங்களது நாமதேயம் என்ன?" என வினவினுன் துரை.

"தம்பி, என்பெயர் எமில். நீர் தாயை இழந்தீர். நானுே தந்தையையும், தாயையும்இழந்து தரித்திரனுய் நடுத்தெருவில் நிற்கையில், வழியில் சென்ற குருவானவரால் காப்பாற்றப்பட்டு, அவர் மூலமாய்ப்படித்து தேவசித்தப்படி தேவதொண்டனுனேன். எப்படி ஆபத்துவேளையிலும் கடவுளைநம்பினுேர் கைவிடப்பட மாட்டார். சற்றுயோசி...'தற்கொலையென்னும் தாங்கொணுப் பாவத்திலேவிழ இருந்தஉன்னைக் காப்பாற்றியது கடவுள்தான் தம்பி" என்று சொல்லி அவனை அழைத்துக் குருவானவரின் உதவியால் கண்ணைச்சீர்ப்படுத்தித் தமதுசபையாகிய அப்போஸ்தொலிக்கசபையில் பலகுரவர்களின் சொற்களைக்கேட்டு அவர்கள் மூலம் துரையையும்சேர்த்து வாழ்வளித்தான் தொண்டன் எமில்.

ச. யேசுதாசன் லெயோபோல்ட்,
அரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



அன்புத் தம்பி, தங்கையரே!

இலங்கைவாழ் கத்தோலிக்கருக்கு, விசேஷமாய்ச் சிறுவராகிய உங்களுக்கு ஆபத்து நிறைந்த காலம் இது. அரசாங்கம் கத்தோலிக்க பாடசாலைகளை எடுப்பதால் எமது சமயஉரிமை பறிக்கப்படுகின்றது. முன்னர் இருந்த சலுகைகளும் இழக்கப்படுகின்றன. நீங்கள் உங்கள் ஞானத் தந்தையராகிய குருமார், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிமார் முதலானவருடைய சேவையை, அன்பு அரவணைப்பை இழக்கப்போகின்றீர்கள். ஒழுக்கம், பண்பு, நீதி எல்லாம் எமது பாடசாலைகளில் நின்று ஓடப்போகின்றன. இந்த இக்கட்டான நேரத்தில் சர்வேசுரனிடமும், மருதமடுத் தாயாரிடமும் மிகவும் உருக்கமாக மன்றாடுங்கள். எங்கள் பாடசாலைகளைக் காப்பாற்றி, தீமையிலிருந்து இரட்சிக்கும்படி மன்றாடுங்கள்.

உங்கள் அன்புள்ள அண்ணா

## கோடீஸ்வரனும் குடியானவனும்

பிரான்ஸ்தேசத்தில் லயன்ஸ் பட்டணத்தில் சகல கலைஞானங்களும் கற்றுத்தேர்ந்த சாஸ்திரி ஒருவர் இருந்தார். அவர் பிரபு குலத்தில் பிறந்த கோடீஸ்வரன். இந்தச் சாஸ்திரி ஒருநாள் குடியானவன்ஒருவன் எங்கேயோ தீவிரமாய்ப்போவதைக் கண்டு, அவனை வழியில் சற்றே நிறுத்தி, "அப்பா, நீ எங்கே இவ்வளவு துரிதமாய் நடந்து போகிறாய்?" என்று கேட்டார்.

"ஐயா, கோவிலுக்குப் போகிறேன்; இன்று ஞாயிற்றுக்கிழமை அல்லவா" என்றான் குடியானவன்.

கோடீஸ்வரனாகிய இந்தச் சாஸ்திரி குழந்தைப்பருவத்தில் ஞானஸ்நானம் பெற்றிருந்தும் வாலிபப் பராயமடைந்ததும் கடவுள் இல்லையென்று சாதிக்கும் நாஸ்திகக் கூட்டத்தைச் சேர்ந்தவர். குடியானவனை நோக்கி, "கோவிலில் என்ன செய்யப்போகிறாய்?" என்றார்.

"தெய்வத்தைக் கும்பிடப்போகிறேன் ஐயா" என்று குடியானவன் பதிலுரைத்தான்.

"அப்பா, இன்னுமோர் கேள்வி; நீ கும்பிடப்போகிற தெய்வம் பெரிய சுவாமியா, சின்னச் சுவாமியா?" என்று பரிகாசமாய் வினவினார் அந்தப்பெரிய நிபுணர்.

இதற்கு ஏழைக் குடியானவன், "அவர் பெரியவரும், சிறியவருமாயிருக்கிறார்" என்று மகாவணக்கத்துடன் மொழிபகர்ந்தான்.

இதைக் கேட்டதும் சாஸ்திரி சற்றே ஆச்சரியத்துடன், "அது எப்படியாகும்? ஒருவர் பெரியவரும், சிறியவருமாய் இருக்கமுடியுமா?" என்றார்.

**கடவுள் பெரியவர்:** "பரலோகமும், பூலோகமும் அவரைத் தன்னுள் அடக்கமுடியாது; பெரிய இராசாக்களும், பிரபுக்களும், குபேர செல்வம்படைத்த கோடீஸ்வரரும், சகல சாஸ்திரங்களையும் கற்றறிந்த அறிவாளரும் அவர்முன் நம் காலில் மிதிபடும் புழுவுக்குச் சமானம்."

**கடவுள் சிறியவர்:** "எப்படியென்றால், எங்கள் கோவிலில் இருக்கும் சிறு தேவநற்கருணைப் பேழையில் வசிக்கிறார்; அதிலும் சிறியதாகிய என் சின்ன இருதயத்துக்குள் குடியிருக்கச் சித்தமாயிருக்கிறார்." என்றான் குடியானவன்.

படியாத பாமரக் குடியானவன் நாவிலிருந்து புறப்பட்ட ஞானம் நிறைந்த இவ்வார்த்தைகளைக் கோடீஸ்வரன் கேட்டுப் புத்தி தெளிந்து, அவன்கரங்களைப் பிடித்துக்குலுக்கி, "இதோ, நானும் கோவிலுக்கு வருகிறேன்; என்னைக் குருவானவரிடம் அழைத்துக்கொண்டு போ" என்று சொல்லி அவனைப் பின்தொடர்ந்து போனார். வெகுநாளாய்த் தாம்விட்டொழித்த கோவில்முகம் பார்த்தார். உத்தம மனஸ்தாபத்தோடு கண்ணீர் சிந்தி, நல்ல பாவசங்கீர்த்தனம் செய்தார். அதுமுதல் அந்த எளியகுடியானவனைத் தனதுபெரிய உபகாரி என்று பாவித்துவந்தார்.

## அசனத்திற்கு முன்னும் பின்னும்

### செபம் சொல்வது அவசியம்

ஒருசிறு ஊரில் தாயும், தகப்பனும், ஒன்பது சிறுபிள்ளைகளுமுள்ள கத்தோலிக்க குடும்பமொன்று இருந்தது. இவர்கள் பரம ஏழைகள். பலநாள் சாப்பாட்டுக்கு வழியின்றிப் பசிப்பிணியால் வருந்துவார்கள். ஒருநாளும் வயிறுநிறைய இவர்கள் கஞ்சிகுடித்து அறியமாட்டார்கள். அடிக்கடி இவர்கள் அரைப்பட்டினி கிடக்கநேரிடும். இவர்கள் உடுத்துவது கந்தைவஸ்திரமே. குளிராலும் துன்பப்படுவார்கள்.

இவர்கள் நல்ல கிறீஸ்தவர்கள் தான். ஆனால், அந்தக் குடும்பத்தில் ஒருகுறை மாத்திரமுண்டு. உணவு அருந்த உட்காரும்போது அசனத்துக்குமுன் சொல்லவேண்டிய செபத்தை இவர்கள் ஒருநாளும் சொல்வதில்லை. சாப்பாட்டுக்குப் பின்னும் நன்றியறிந்த தோத்திரச்செபம் சொல்லுவதில்லை.

குடும்பத்து மூத்தமகள் ஒருநாள் அடுத்தஊரிலிருந்த தன் அத்தையின் வீட்டிற்குப்போனாள். அவ்வீட்டில் அவள் அத்தையும், அவளுடைய ஒரேமகளுமாக இருவரே வசித்து வந்தனர். இவர்கள் ஏழைகளாக விருந்தும் நன்றாகவே சீவித்து வந்தார்கள். இதற்குக்காரணம் என்னவென்று இவள் யோசித்தபொழுது, இவள்புத்தியில் ஒன்றுபட்டது. அதாவது, தன் அத்தை சாப்பிட உட்காரும்பொழுதும், அதைவிட்டு எழும்பும்பொழுதும் ஒருநாளும் தவறாது செபம்சொல்லி வந்ததே என உணரலானாள்.

பிறகு அந்த மூத்தமகள் தன் வீட்டிற்குத் திரும்பிச்சென்றபோது தன் தாயாரை நோக்கி, "ஏனம்மா, நீங்கள் சாப்பிடுவதற்கு முன்னும், பின்னும் செபம் சொல்லுகிறதில்லை? அத்தை வீட்டில் தினந்தோறும் தவறாமல் செபம்சொல்லி வருகிறார்களே" என்று சொன்னாள்.

அதற்குத் தாயார், "ஆமாம் மகளே, அதுநல்ல பழக்கந்தான்; இப்படிச் செய்யவேண்டுமென்று இதுவரையில் யாரும் எனக்குக் கற்பித்ததில்லை; இனி உன் அத்தை வீட்டிற் போலநாங்களும் அசனத்திற்கு முன் பின் செபங்களைத் தவறாமல்சொல்லுவோம்; கடவுள் எங்கள் கஷ்டங்களைக் கருணையுடன் தீர்ப்பாராக" என்றுசொல்லி அன்றுமுதல் அந்த வீட்டில் அப்படியே செபஞ்செய்து வந்ததின் பயனாக அவர்களுடைய அட்டதரித்திரம் எப்படியோ நீங்கிப் போகச் சாப்பாட்டுக்குக் கஷ்டமின்றிப் போதுமான உணவும், உடுத்த உடையும் கிடைக்கவே சந்தோஷமாய் வாழ்ந்துவந்தனர்.

அன்ரனெற் சோமாபோல்

உங்கள் விஷயதானங்களை மேல்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்
"அண்ணா",
அர்ச். அன்னம்மாள் கோவில்,
பாண்டியந்தாழ்வு,
சுண்டிக்குளி.

## அடிகள் காட்டிய

### வட்டாரியும் வாழ்வும்

தற்போது ஈழத்தில் சுற்றுப்பயணம் புரிந்துகொண்டிருக்கும் குன்றக்குடி அடிகளார் கடந்த 11-8-60-இல் ஹற்றன், அர்ச். யோண்பொஸ்கோ கல்லூரியில் இளம்உள்ளங்களுக்கு அறிவுமழை பொழிந்தார். அன்னார் பேசியதின் ஒருமுக்கிய பகுதியைமட்டும் ஈழத்து இளைஞர்களுக்கு எடுத்துக்கூற விரும்புகின்றேன். பயனளிக்கும் என்றமுறையில் மட்டுமல்ல, முக்கியம் என்றமுறையிலும் தருகின்றேன்.

வாழ்வை எப்படி அமைக்கவேண்டும் என்பதைக்காட்ட அடிகளார் வட்டாரி (கொம்பஸ்) ஒன்றையே உதாரணமாகக் காட்டினார். கொம்பஸில் இரண்டுகம்பிகள் உண்டு. அவற்றில் ஒன்று, மையத்தில் அசையாதிருப்பதற்காகக் கூர்மையாக இருக்கின்றது. மற்றொன்று, பென்சில் பொருத்துவதற்கேற்ப அமைக்கப்பட்டுள்ளது. மையத்தில் கூர்மையான கம்பியைவைத்துப் 'பென்சில்' உள்ளபகுதியைச் சுழற்றவே வட்டம் ஒழுங்காக அமைகின்றது. அங்ஙனம்இல்லாது கையால்வரையும்வட்டம் ஒழுங்கற்றதாகவே அமைகின்றது. அதுபோலவே 'வாழ்க்கை' எனும் வட்டத்தை வெறுமனே ஒழுங்குபட அமைத்தல் இயலாது. ஆனால், கடவுள்பக்தியைக் கொம்பஸின் கூர்மையான கம்பியாகக் கொண்டு முயற்சியைப் 'பென்சில்' பொருத்திய கம்பியாகவைத்து வாழ்க்கைவட்டத்தை அமைப்போமாயின் நிச்சயம் ஒழுங்குபட அமையும்" என்று அவர் பேசுகையில் கூறினார்.

அடிகள் கூறியதுபோல் புதிய கொம்பஸ் ஒன்றைக் கடவுள் பக்தி, முயற்சி இவைகள்மூலம் அமைப்போமாயின் நிச்சயம் வாழ்வு வளம் பெறும். அன்பர்காள்! தொடங்குங்கள் புதியவாழ்வை அமைக்கும் வேலையை.

— ஏ. போல் அந்தோனி

**பாலர் பக்கம்**

**அங்கத்தவர் மனுப்பத்திரம்**

பெயர்: ..............................

ஆண் / பெண்: ..............................

பிறந்த திகதி: ..............................

வகுப்பு: ..............................

பாடசாலை: ..............................

வீட்டு விலாசம்: ..............................

விசாரணைப்பங்கு: ..............................

முதல் நன்மை பெற்ற திகதி: ..............................

உறுதிப்பூசுதல் பெற்ற திகதி: ..............................

விண்ணப்பப்பத்திரம் அனுப்புவோர் மூன்று விண்ணப்பப் பத்திரங்களையும் ஒன்றாக வைத்து அனுப்பவேண்டும். தனித்தனி அனுப்புவன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

### பாக்கியசாலிகளான பறவைகள்

அர்ச். கூரேதார்ஸ் ஒருசமயம் அடர்ந்த சோலையினூடாக நடந்து செல்லுகையில், மரங்களில் உட்கார்ந்து இனிய குரலில் இன்பமாய்ப் பாடிக்கொண்டிருந்த குருவிகளை நோக்கி, "பாகியசாலிகளான சின்னஞ்சிறு பறவைகளே! சர்வேசுரனைப் புகழ்ந்து போற்ற நீங்கள் அவரால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறீர்கள்; அவருக்குத் தோத்திரமாக இனிய கீதங்களைத் தினந்தோறும் பாடிவருகின்றீர்கள். சர்வேசுரனைச் சிநேகிக்க மனுஷன் அவரால் சிருஷ்டிக்கப்பட்டான்; மனுஷனோ அவரைச் சிநேகிக்கிறதில்லை" என்று பெருமூச்சுவிட்டுப் புலம்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களிடம்:

## சத்திய வேதாகமம்

(தமிழ்)

விலை: ரூபா 12-00
தபாற் செலவு: சதம் 75.

* * *

## தினசரி பூசைப் புத்தகம்

விலை: ரூபா 11-50
தபாற் செலவு: சதம் 35.

* * *

## எனது பூசைப் புத்தகம்

விலை: ரூபா 5-50
தபாற் செலவு: சதம் 55.

விற்பனைக்கு இருக்கின்றன.

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
பெரியதெரு,
யாழ்ப்பாணம்.

* முற்பணம் அனுப்பாத வி. பி. பி. ஓடர்கள் கவனிக்கப்படமாட்டாது.


## மரண அறிக்கை

நம் பட்டணத்திலே சின்னக்கடைவீதியில் வசிப்பவரும், யாழ்ப்பாணம், பெரிய தபாற்கந்தோரில் ஆராய்ச்சியாராயிருந்து இளைப்பாறியிருப்பவரும், சில வருடகாலம் இம்மனுவேல் திருச்செல்வம் ஓடுகள் ஸ்தாபனத்தில் கடமையாற்றியவருமான திரு. அந்தோனிப்பிள்ளை கிறகோரி அவர்களின் ஏக புதல்வரும், கொழும்பிலே அரசாங்க றெயில்வேப் பகுதியில் தெமட்டக்கொடையில் "கோல்கிறவுண்"டில் உத்தியோகம் வகித்திருந்தவருமான திரு. ஜி. அன்ரனி இம்மனுவேல் அவர்கள் காத்திராப்பிரகாரம் கடின நோய்கண்டு, எவ்வித சிகிச்சைக்கும் குணமுறாது அந்திய தேவதிரவிய அனுமானங்களை நல்லறிவுடன் பெற்றுச் சென்ற 3-9-60 சனிக்கிழமை பகல் 11 மணியளவில் மரணத்திரையில் மறையலாயினர். இவரின் பிரேதமானது அன்று சாயந்தரம் பெற்றாரின் இல்லத்திலிருந்து மனைவியாரின் பதியாகிய கரம்பனுக்குக் கொண்டுசென்று துக்கங் கொண்டாடப்படலாயிற்று. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் இவரின் பிரேத சேமமானது பலவிடங்களிலுமிருந்து வந்துகூடிய பெருந்திரளான இனசனர், சிநேகிதர் சமுகமாக, இவரது மனைவியாரின் மாமனாரான வண. பி. தியோகுப்பிள்ளை சுவாமியவர்கள் துக்க சங்கீதங்கள் பாடி அந்திம திருச்சடங்குகளை நிறைவேற்றிக் கடைசி ஆசீர்வாதம் கூறிநிற்க, சிறப்பாக நடந்தேறியது. இவரை இழந்து துன்புறும் பெற்றாரோடும், மனைவியார், பிள்ளைகள் ஐவரோடும் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

**R. I. P.**

## போக்குவரத்துச்சபை நஷ்டம்

பஸ்போக்குவரத்துச்சேவை தேசியமயமாக்கப்பட்டது முதல் இதுவரை இலங்கைப் போக்குவரத்துச்சபை அடைந்துள்ள 1கோடியே 35லட்சம் ரூபா நஷ்டத்தைப்பற்றி விசாரணை செய்து அறிக்கைசமர்ப்பிக்கும்படியாக அச்சபையின் தலைவர் திரு. ஆர். டி. டிசில்லா மூவரைக்கொண்ட ஒருவிசாரணைச்சபையை நியமித்திருக்கின்றார்.

## 1-ம் வருட மரண ஞாபகம்

### திரு. V. யோசேவ் பொன்னையா

எனது நேசபத்தாவும், எங்கள் அருமைத் தந்தையுமாகிய யோசேவ் பொன்னையா கர்த்தரில் மரித்த 1-ம் வருட நிறைவு தினம் 19-9-60 திங்கட்கிழமை பூர்த்தியாகின்றது. அன்றுதினம் அச்சுவேலி அர்ச். சூசையப்பர் ஆலயத்தில் காலை 6-15 மணிக்கு அன்னாரின் குருபுதல்வரால் ஓர் துக்கப்பாடற் பூசை நிறைவேற்றப்படும். அன்பர்களே! இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவாய்க் கேட்கின்றோம்.

இவர் சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

இவரைப் பிரிந்துதுயருறும்
(பிரியபாரியாரும், பிள்ளைகளும்.)
அச்சுவேலி.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அற்புத சதாசகாயமாதாவிடம் நான் கேட்டு மன்றாடினவைகள் கிடைக்கப் பெற்றேன். மீதயாயுள்ளவைகளும் கிடைக்கும்படி கெஞ்சி மன்றாடுகிறேன்.

அருமை
முகத்துவாரம்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நான் சத்திர சிகிச்சைக்குள்ளாய் நம்பிக்கையற்ற நிலைமையில் இருந்தபோது நாளுட்டான் அர்ச். ஆரோக்கியமாதா, சதாசகாயமாதா, பாத்திமாமாதாவின் இரக்கத்தாலும், அர்ச். ஆரோக்கியநாதரின் மன்றாட்டாலும் நான் சுகமடைந்தேன். நேர்த்திப்படி நன்றியறிந்த ஸ்தோத்திரம் தெரிவித்து இதனைப் பிரசுரஞ் செய்கிறேன்.

அந்தோனிப்பிள்ளை வெஞ்சமின்,
கரம்பன்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3145**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

காரைநகர் கிழக்கு
சண்முகம் முருகேசு பேரம்பலம்
—வழக்காளி.

எதிராக, சிவியாதெரு கிழக்கு
முத்துத்தம்பி பொன்னம்பலம்
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3145-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணி 1960-ம் ஆ ஐப்பசி மாதம் 29-ந் திகதி (29-10-60) சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 6820/- ம், இன்னும் ரூபா 5500/-க்கு 12-11-59 தொடக்கம் 31-3-60 வரையும் 100 க்கு12% வட்டியும் பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100 க்கு 5% வட்டியும் கோட்டுச் செலவு 281 ரூபா 20 சதம்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சிவியாதெரு இறை "ஆத்திக்காட்டு வளவு" ப. நி. இ. 7 ம் இன்னும் மேற்படி இறை "ஆத்திக்காட்டு வளவு" ப. நி. இ. 2 ம் ஒருநகு சேர்ந்து ப. நி. இ. 9 ம் கல்வீடுகளும் வீடுகளும் தலைவாசல் கிணறு பயிர்வகைகள் இன்னும் அதற்குரியவைகளும். எல்லை: கிழக்கு — முருகர் முத்துத்தம்பிக்கும் நாகமணி பரமுவிற்கும் உரிய ஆதனம். வடக்கு — தம்பு கந்தையாவிற்கும் கதிரவேலு சின்னத்தம்பிக்கும் பெண் அன்னப்பிள்ளைக்கும்உரிய ஆதனம். மேற்கு—ரோட்டு. தெற்கு—தம்பு கனகரெட்டினத்திற்கும் பெண் அன்னம்மாவிற்கும் உரிய ஆதனம் இதடங்கலும்.

2. மேற்படி சிவியாதெரு இறை "சொல்லன் காடு" ப நி. இ. 33 குளி 15 பனைகள் தென்னைகள் மற்றும் பயிர்வகைகளும் அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு—கார்த்திகேசு பெண் அன்னத்தின் ஆதனம். வடக்கு—கணபதிப்பிள்ளை மறுபேருக்கும் நாகநாதிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு—குறித்த நாகநாதிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு—ஒழுங்கையும் மாரிமுத்து சுப்பிரமணியத்திற்கும் கணபதி சின்னத்தம்பிக்குமுரிய ஆதனம் இதடங்கலும்.

3. மேற்படி சிவியாதெரு இறை "மடத்துக்குவிட்ட புதுக்குளத்து வயல்" ப. நெ. இ, 10. எல்லை: கிழக்கு—கதிரவேலு பொன்னம்பலத்துக்கும் முத்துத்தம்பி பொன்னம்பலத்துக்குமுரிய ஆதனங்கள். வடக்கு—தம்பு கதிரவேலுவினுதனம். மேற்கு—தம்பிமுத்து பெண் அன்னப்பிள்ளையினுதனம். தெற்கு—குறித்த தம்பிமுத்து பெண் அன்னப்பிள்ளைக்கும் வல்லிபுரம் பெண் சின்னத்தங்கத்திற்குமுரிய ஆதனம் இதடங்கலும்.

**தா. செல்லையா,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 37, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,

● பார்சியதேச ஷாமன்னர் தெகரன் தலைநகரிலே சகல திருச்சடங்கு முறைகளையும்சேர்ந்த கத்தோலிக்க சமூகத்திற்கென்று ஒருபெரும் காணியை உபகரித்திருக்கின்றார். இதிலே ஒருகத்தோலிக்க ஆஸ்பத்திரியும், ஒரு சந்நியாச சபைக்கென்று ஒருகத்தோலிக்ககல்லூரியும், பல்வேறு திருச்சடங்கு முறைகளையும்சேர்ந்த குருமாரைப் பயிற்றுதற்கென்று ஒருகுருமடமும் கட்டப்படவிருக்கின்றன.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2860**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

பொன்னம்பலம் சிவபாதசுந்தரம்
தெல்லிப்பளை தென்கிழக்கு
—வழக்காளி.

எதிராக

1. கணபதிப்பிள்ளை கணேசலிங்கம் அளவெட்டி.
2. மனைவி பத்மாதேவி அளவெட்டி தற்போது சரசாலைச் சந்தி சரசாலை.

—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2860-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1960-ம் ஆல் அக்டோபர் மாசம் 15-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 1181/- ம் மேலும் 1000/- ரூபாவுக்கு 8-6-59-ந் திகதி தொடக்கம் 22-12-59-ந் திகதி வரைக்கும் வருடமொன்றுக்கு 10% வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுக்கு 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 208-94 சதம்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை "புளியந்தாவத்தை" நெற்பரப்பு 9 கிணறும் செய்பயிர் வான்பயிர்களும். இதற்கு எல்லை: கிழக்கு—விநாசித்தம்பி ஐயாத்துரைக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். வடக்கு — பொன்னையா மனைவி மகேஸ்வரிக்குரிய ஆதனம். மேற்கு—கணபதிப்பிள்ளை கணேசலிங்கத்துக்கும் கனகநாயகம் மனைவி தங்கக்குட்டிக்குமுரிய ஆதனங்கள். தெற்கு — காசிப்பிள்ளை தாமோதரம்பிள்ளையின் உரிமைக்காரர்களுக்குரிய ஆதனம். மற்றவர்களுக்குரிய கிணற்றுப் பங்கும் வழமையான வாய்க்காலும் புறநீங்கலாக இது முழுவதும். பதிவுஇல. H. 304/272.

**வி. செ. குட்டிப்பிள்ளை,**
கொமிஷனர்.

643, காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை, 7-9-60.

● மேற்கு வங்காளத்தின் தெற்கு எல்லையிலுள்ள நாகதீவிலே கொலை, கொள்ளை, எரியூட்டுதல் முதலான கொடுஞ்செயல் புரியச் சதிசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த கம்யூனிஸ்த எம். பி. திரு. சன்சாரி ஹல்தாருக்கு அலிப்பூர் நீதிபதி ஆயுள்கால சிறைத்தண்டனை விதித்திருக்கிறாரெனக் கல்கத்தாவிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

● கம்யூனிஸ்தர்கள் தவறானவிதத்திலும், தேசத்திற்கு விரோதமான முறையிலும் நடந்துகொள்ளுகிறார்கள். இந்தியரின் சிந்தனைகளுக்கு எதிரான முறையிலே 'பொய்ப்பிரசாரம்' செய்து வருகிறார்களென்று இந்திய பிரதமர் நேரு சென்ற இந்திய பாராளுமன்றத்திலே கூறிக் கம்யூனிஸ்தர்கள்மீது குற்றஞ் சுமத்தியிருக்கின்றார்.

● இந்தியபிரதமர் நேருஅவர்கள் சென்ற 18-ந் திகதியன்று இந்திய பாராளுமன்றத்தில் பேசியபோது, "கடந்த சில வருடங்களிலும் பார்க்க இப்போது உலகநிலைமை மிகவும்ஆபத்தாகிவிட்டது; ஆயினும், இந்தஆபத்து உடனடியாகநேருமென்று நான்கருதவில்லை; ஆனால், நிலைமையில் அபிவிருத்தி இல்லையென்றால் எந்தநேரத்திலும் ஆபத்துவரக்கூடும்" எனக் கூறியிருக்கின்றார்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, Septemder 15-1960.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org